வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 07   14.06.2026 ஞாயிற்றுக்கிழமை   இதழ் : 159   பக்கங்கள் : 16

# கொலையாளிகளும் ஊழல்வாதிகளும் உத்தமர்கள் ஆவதற்கு இடமளியோம்!

### கொச்சிக்கடை திருவிழாவில் பேராயர் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, ஜூன். 14

கடந்த காலங்களில் மனித உயிர்களை அழித்து, தங்களது கைகளை இரத்தத்தால் நனைத்துக்கொண்ட கொலையாளிகளும் ஊழல்வாதிகளும், மீண்டும் தங்களைக் கழுவிக்கொண்டு உத்தமர்களைப் போல சமூகத்தின் முன்னால் வர நாம் இட மளிக்கப் போவதில்லை. உயிர்த்த ஞாயிறு தின தாக்கு தல் குறித்த உண்மைகளை மூடிமறைக்க எவ்வகையிலும் அனுமதிக்கமாட்டோம் என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல திருவிழாவை முன்னிட்டு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விசேட ஆராதனையின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

2024 செப்ரெம்பர் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, புதிய ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்த போது, இந்த பாரதூரமான குற்றத்தின் உண்மைகளை ஒருபோதும் மறைக்கவிடமாட்டேன் என்று வாக்குறுதியளித்தார். அதற்கமைய, தற்போதைய விசாரணைகள் புத்துயிர் பெற்றுள்ளன.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் அரசியல் சதித்திட்டம்

15

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## குற்றவாளிகள் யாரானாலும் தண்டிக்கப்படுபது அவசியம்!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன். 14

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் எவராக இருந்தாலும், அவர்கள் அனைவருக்கும் தகுந்த தண்டனை வழங்கப்படும் வரை ஐக்கிய மக்கள் சக்தி அதற்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளில், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கு முன்னின்று உழைக்கும் எந்தவொரு பாதுகாப்புப் பிரிவுக்கும் எங்களது முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் வழங்குவோம். இந்த விசாரணைகளில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது தவறுகள் ஏற்படுமாயின், அதனைக் கண்டறிந்து சரி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பா கும்.

எமது நாட்டில் நம்பகத்தன்மை மிக்க

15

## 6 ஆவது நாளாக தொடரும் சாலேயின் உணவு தவிர்ப்பு

கொழும்பு, ஜூன். 14

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, நேற்று ஆறாவது நாளாகவும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், நேற்றைய தினமும் சுரேஷ் சாலேயை நேரில் பார்ப்பதற்காக அவரது மனைவி மருத்துவ மனைக்கு சென்றிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஒன்றுக்காக

15

## நீதிமன்றப் பணியாளர் உட்பட மூன்று பேர் விளக்கமறியலில்!

வவுனியா, ஜூன். 14

பொது சொத்துக்களை முறைக்கேடாக கையாண்ட குற்றச்சாட்டில் வவுனியா நீதிமன்றில் கடமை புரியும் சிரேஸ்ட உத்தியோகத்தர் உட்பட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச்சம்பவம் தொடர்பான சந்தேகநபர் ஒருவரின் வழக்கின் கோவைகளை நீதிமன்றில் இருந்து சட்டவிரோதமான முறையில் கைமாற்றியது

அதற்கு உதவி புரிந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

15

### பயங்கரவாதத் தடைச் சட்டம்:

## நிரபராதிகளின் ஆயுட்காலம் சிறைகளிலேயே முடிகின்றது!

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சாடல்



கொழும்பு, ஜூன். 14

பயங்கரவாதத் தடைச் சட்டம், 44 ஆண்டுகளைக் கடந்தும் இன்னும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்துள்ளார்.

15

## பல இலட்சம் தமிழ்மக்கள் பாதிக்கப்பட்ட பயங்கரவாதச் சட்டத்தை நீக்க வேண்டும்!



### சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன். 14

பயங்கரவாத தடைச்சட்டம் மாற்றுச் சட்டமின்றி உடனடியாக நீக்கப்படவேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை

15

## மாகாணசபைத் தேர்தல் சட்டச் சிக்கல்கள் தேர்தல் ஆணைக்குழுவால் முன்மொழிவுகள்

கொழும்பு, ஜூன். 14

பழைய தேர்தல் முறைமையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின் பெண் பிரதிநிதித்துவம் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தின் போது வேட்புமனுக்களுக்கான ஒதுக்கீடு மட்டும் மற்றும் - கட்டாய ஆசன ஒதுக்கீடு என்ற அடிப்படையில் பல யோசனைகளை தேர்தல்கள் ஆணைக்குழு பாராளுமன்ற விசேட செயற்குழுவுக்கு முன்வைத்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலுக்கான சட்டக் கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு தயார்நிலை குறித்த தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற விசேட செயற்குழு கடந்த மாதம் 29 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் அறிக்கை கோரியிருந்தது.

15

## 2029 இல் நாமல் ஜனாதிபதி தமிழருக்கு தீர்வு கிடைக்கும்

### அர்ச்சுனா எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, ஜூன். 14

நாமல் ராஜபக்ஷ தனது சிங்கள இனத்தின் மீது பற்றுக்கொண்டுள்ளார். ஆகவே அவர் ஏனைய இனங்களையும் ஆதரிப்பார். 2029 ஆம் ஆண்டு நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். அவருடன் பேசி நாங்கள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைக்குத் தீர்வு காண்போம். புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இந்த அரசாங்கத்துக்கு நிதியளிக்கக்கூடாது என யாழ். மாவட்ட பாராளுமன்ற

15

## அரசின் எரிபொருள் மானியம் இம்மாதத்துடன் நிறைவடையும்!

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தகவல்

கொழும்பு, ஜூன். 14

எரிபொருளுக்காக அரசாங்கம் வழங்கி வரும் மானியம் ஜூன் மாதத்துடன் நிறைவடைவதாகவும், அரசாங்கம் இதுவரை எந்த இறுதி முடிவையும் எடுக்கவில்லை எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க நிதி பற்றிய பாராளுமன்றக் குழு முன்னிலையில் ஆஜராகிய அதிகாரிகள் இந்த விடத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

15

## நாட்டை எம்மிடம் தாருங்கள் நடத்திக் காண்பிக்கிறோம்!

### மஹிந்த ராஜபக்ச சவால்

கொழும்பு, ஜூன். 14

நாட்டை எம்மிடம் தாருங்கள் நடத்தி காண்பிப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

இன்று நாட்டின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிக்கு

15

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புலோலியில் கிணற்றில் இருந்து 6 வயதுச் சிறுவனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன். 14

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலி தெற்குப் பகுதியில் காணாமல் போயிருந்த சிறுவன் ஒருவனின் சடலம், வீட்டின் அருகிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு இந்தச் சிறுவன் காணாமல் போயுள்ளதாகப் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.


அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது சிறுவனின் சடலம் கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 6 வயதுடைய சிறுவன் எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# மன்னாரில் தெரிவு செய்யப்பட்ட 40 விவசாயிகளுக்கு விதைகடலை




மன்னார், ஜூன். 14

மன்னார் மாவட்டத்தில் டிற்வா புயலினால் பாதிக்கப்பட்ட 40 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை விதை கடலைகள் (கச்சான்) வழங்கப்பட்டன.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி அனுசரணையில் தெரிவு செய்யப்பட்ட 40 விவசாயிகளுக்கு தலா 25 கிலோ நிறையுடைய விதை கடலை இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் பணியாளர்கள் இணைந்து மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கினர்.

(அ)

# வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் பாரம்பரிய, நவீன கலைஞர்கள் ஒன்றுகூடல்!

யாழ்ப்பாணம், ஜூன். 14

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கலாமன்றங்களின் கலைஞர்களுக்கான விசேட ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில், வருகை தந்திருந்த விருந்தினர்கள் மற்றும் கலைஞர்கள் அனைவரும் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி பொன்னாடை போர்த்தியும், மாலை அணிவித்தும் பன்னீர் தெளித்து மங்கள கரமாக வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, வருகை தந்திருந்த முக்கிய விருந்தினர்களால் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டு நிகழ்வுகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற அமர்வில், கலந்து கொண்ட கலைஞர்கள் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டதுடன், தற்காலத்தில் கலைத் துறை சந்திக்கும் சவால்கள், எதிர்கால வளர்ச்சி மற்றும் தங்களின் தேவைகள் குறித்த பல்வேறுபட்ட கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். கருத்துப் பரிமாற்றங்களைத் தொடர்ந்து, கலைஞர்களினால் தத்தமது கலைத்துறை சார்ந்த வாழ்வாதார மற்றும் கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையிலான கலை ஆற்றுகைகளும் (நிகழ்த்துகைகளும்) மேடையேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த பாரம்பரியக் கூத்துக் கலைஞர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், நவீன நாடக மற்றும் இசைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் எனப் பல் துறை சார்ந்த கலைஞர்கள் திரளாகக் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

(அ)



# ஈஸ்டர் தாக்குதலை தடுக்கத் தவறிய அதிகாரிகளுக்கே முதலில் தண்டனை!

## வலியுறுத்துகிறது சுதந்திரக் கட்சி



கொழும்பு, ஜூன். 14

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே புலனாய்வுத்துறை தகவல் கிடைத்தும், அதனைத் தடுத்து நிறுத்தத் தவறிய பாதுகாப்புத் துறையின் உயர் அதிகாரிகளுக்கு எதிராகவே முதலாவதாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட வேண்டும் என சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மகளிர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தாக்குதலின் பின்னணியில் உள்ள முதன்மை சூத்திரதாரி யார் என்று தேடிக் கொண்டிருப்பதை விட, இந்த விவகாரத்தில் மிக எளிமையான அணுகுமுறை ஒன்று உள்ளது.

தாக்குதல் நடத்தப்படவுள்ள இடங்கள் மற்றும் தாக்குதல் நடத்துபவர்களின் பெயர்கள் உள்ளிட்ட துல்லியமான புலனாய்வுத் தகவல்கள் தாக்குதலுக்கு முன்னரே பாதுகாப்புப் பிரிவினருக்குக் கிடைத்திருந்தன என்பதை நாடும் ஏற்கும், அனைத்துப் பாதுகாப்புத் தரப்பினரும் ஏற்றுக்கொள்கிறார்கள். தாக்குதலுக்கு ஒருசில மணி நேரத்திற்கு முன்னர்கூட இந்த எச்சரிக்கை செய்தி மீண்டும் வந்துள்ளது.

ஒரு கிராமத்தில் சாதாரண சண்டை நடந்தால்கூட "119" அவசர எண்ணுக்கு அழைத்தவுடன் பொலிஸார் விரைந்து செல்லும் நிலையில், இவ்வளவு பெரிய ஆபத்து குறித்து தகவல் கிடைத்தும் கொழும்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர், பொலிஸ்மா அதிபர், மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் ஏன் ஒரு பொலிஸ் வாகனத்தையாவது அனுப்பி முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை.

2019 இல் இந்தத் தாக்குதல் நடக்கும்போது ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோர் பாதுகாப்புத் துறையின் முதன்மையான உயர் பதவிகளில்தான் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் மட்டுமல்ல, இப்போதும் ஓய்வு பெறாமல் பொலிஸ் துறையின் உயர் பதவிகளில் இருக்கும் பல அதிகாரிகள் அன்றைய தினம் பொறுப்பான பதவிகளில் இருந்தவர்களே.

புலனாய்வுத் தகவல் கிடைத்த பின்னரும், அதற்குரிய கடமைகளைச் செய்யவேண்டாம் என்று அவர்களுக்கு மேலிருந்து யாராவது உத்தரவிட்டார்களா அல்லது அவர்களாகவே அலட்சியமாக இருந்தார்களா என்பதை இவர்களிடம் விசாரிப்பதன் மூலம் உண்மைகளை மிக எளிதாகக் கண்டறிய முடியும்- என்றார்.

(அ)

# அச்சுவேலியில் பாரிய தீ பரவல்!



யாழ்ப்பாணம், ஜூன். 14

அச்சுவேலி தீர்த்தங்குளம் (வல்லை களப்பு) பகுதியில் நேற்று முன் தினம் இரவு கடும் காற்று காரணமாக பாரிய தீ பரவல் சம்பவம் ஒன்று ஏற்பட்டது.

யாரோ ஒருவர் குப்பைகளுக்கு வைத்த தீ, காற்றின் வேகம் காரணமாகக் களப்பு பகுதி முழுவதும் பரவி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

பலத்த காற்று வீசியதால், தீ வேகமாகப் பரவி பல ஏக்கர் புற்தரைகள் எரிந்து சாம்பராகின. அத்துடன், சிறிய உயிரினங்களின் வாழ்விடமாக விளங்கும் இக்களப்பு பகுதி பாரியளவில் சேதமடைந்துள்ளது.

இது குறித்து அப்பகுதி மக்கள் அச்சுவேலி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அதனையடுத்து, பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் மாநகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் அழைக்கப்பட்டு, நீண்ட போராட்டத்திற்குப் பின் தீ முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

(அ)

# பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினரின் வாகனம் சுருக்கு வலைகளுடன் சிக்கியது!

யாழ்ப்பாணம், ஜூன். 14

பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஒருவரது வாகனம் சுருக்கு வலைகளுடன் கைப்பற்றப்பட்டதுடன் அதில் பயணித்த உதவியாளர் ஒருவர் வெற்றிலைக்கேணி கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அண்மைக் காலமாக சட்டவிரோத சுருக்கு வலை தொழில் வடமராட்சி கிழக்கு பகுதியில் அதிகரித்து வரும் நிலையில், கடற்படையினர் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையில் சுருக்குவலையுடன் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

(அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இசை அரங்கம்!



வடமராட்சி, ஜூன். 14

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் செல்வி ரேவதி முகுந்தனின் தெய்வீகப் பாடல்களுடன் தெய்வீக இசை அரங்கம் வாராந்த நிகழ்வாக இடம்பெற்றது.

இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரனின் பின்னனி இசையில், மிருதங்கம் - இசைக் கலைமணி வரதராசா ரமணசர்மா, தபேலா - லயவித்துவான் க. முருகையா ஆகிய அணி செய்க லைஞர்களுடன் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.


(அ-02)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தி இல்லை!

### கூறுகிறார் டட்லி சிறிசேன



கொழும்பு, ஜூன். 14

"ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எனக்கு இல்லை. இந்த அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தியில் இல்லை." என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும், பிரபல வர்த்தகருமான டட்லி சிறிசேன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஜனாதிபதித் தேர்தல் உடனே நடக்காது. பலர் தற்போதே வேட்பாளர்களாவதற்கு குவிந்துள்ளனர். எனக்கு அவ்வாறான திட்டம் இல்லை. மறுபுறத்தில் இந்த அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி நிலையிலும் இல்லை.

யார் வேண்டுமானாலும் அரசாங்கத்தை வீழ்த்தலாம். எனவே, பொறுப்பேற்பதற்கு தகுதியானவர்கள் இருக்க வேண்டும். கடந்த காலங்களில் நாட்டை வீழ்த்தியவர்களிடம் ஒப்படைக்க முடியுமா?

நடக்கக்கூட முடியாத நிலையில் உள்ளவர்கள் அரசியல் செய்ய முற்படுகின்றனர். ஜி.எல். பீரிஸ் போன்றவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி, வீட்டில் இருந்து கடைசிக் காலத்திலாவது புண்ணியத்தை தேடிக் கொள்ள வேண்டும்."-என்றார்.

(அ)

# அன்று தேர்தலை ஒத்திவைத்ததால்தான் மக்கள் எங்களை வீட்டுக்கு அனுப்பினர்!

### அரசுக்கு சுதந்திரக் கட்சி முன்னெச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 14

மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாத காரணத்தாலேயே கடந்த காலங்களில் மக்கள் எம்மை வீட்டுக்கு அனுப்பினார்கள் என்றும், எனவே கடந்த காலத் தவறுகளில் இருந்து தற்போதைய அரசு பாடம் கற்றுக்கொள்வது அவசியம் என்றும் சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு சுதந்திரக் கட்சி சார்பாகவும், கூட்டு எதிரணி சார்பிலும் நாம் தொடர்ச்சியாக அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றோம். 'உங்களது ஆட்சிக் காலத்திலும் தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லையா?' என எம்மைக் பார்த்து சிலர் கேள்வி எழுப்பலாம். ஆம், அன்று நாம் தேர்தலை ஒத்திவைத்தது முற்றிலும் தவறுதான்.

அதற்கான தகுந்த பதிலைத் தான் மக்கள் அடுத்த வந்த தேர்தல் ஊடாக எமக்கு வழங்கினார்கள். தேர்தலை நடத்தத் தவறிய எமது கட்சியை நிராகரித்த மக்கள், தேர்தலை முறையாக நடத்துவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய தரப்பினரை ஆதரித்தனர்.

எனவே, தேர்தல் ஒத்திவைப்புத் தொடர்பில் கடந்த கால வரலாற்றில் இருந்து அரசு பாடங்களைக் கற்றுக்கொண்டால் நல்லது. எமது தரப்பு எப்போதும் மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளது. -என்றார்.

(அ)

# சுகாதார சீர்கேட்டுடன் ஐஸ்கிறீம் விற்றவருக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதம் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், ஜூன். 14

சுழிபுரம் பகுதியில் சுகாதர சீர்கேட்டுடன் வாகனத்தில் ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபட்டு வருக்கு 06 மாத காலச் சிறைத் தண்டனை விதித்த நீதிமன்று, அதனை 06 மாத காலத்துக்கு ஒத்தி வைத்ததுடன், 23 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது.

கடந்த வாரம் சங்கானை , சுழிபுரம் மற்றும் அராலிப் பகுதிகளில் உணவு கையாளும் நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம், பாண் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை வாகனங்கள் இனம் காணப்பட்டன.

அவ்வாறு விற்பனையில் ஈடுபட்ட 10 பேருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்கு தொடரப்பட்டது

அதன் போது 10 பேருக்கும் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் தனித்தனியே வாசித்து காட்டியபோது , அவர்கள் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, ஐஸ்கிறீம் விற்பனையாளருக்கு 06 மாத கால சிறைத்தண்டனை விதித்த நீதிமன்று , அதனை 06 மாத காலத்திற்கு ஒத்தி வைத்ததுடன், 23 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்தது.

ஏனைய 09 பேரையும் கடுமையாக எச்சரித்த மன்று, அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் விதித்தது.

(அ)


# இலங்கையில் முதலீடு செய்ய எமக்கு வலுவான நம்பிக்கை!

### ஜனாதிபதியிடம் கூறியது சீன நிறுவனம்

கொழும்பு, ஜூன். 14

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் சைனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்தின் தலைவர் பாய் ஜின்சான் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் "நேரடியான மற்றும் தொலைநோக்குடைய தலைமைத்துவம்" காரணமாக இலங்கையில் முதலீடு செய்வதற்கு தமக்கு வலுவான நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக சைனா ஹார்பர் நிறுவனத்தின் தலைவர் பாய் ஜின்சான் தெரிவித்தார்.



குறிப்பாக, கொழும்பு துறைமுக நகர் சிறப்பு பொருளாதார வலயத்திற்காக வழங்கப்பட்டுள்ள ஊக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்த தலைவர், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ் இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையை அடைந்திருப்பதையும் பாராட்டினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடி வெளிநாட்டு முதலீடுகள் இன்றியமையாத காரணியாகும் என்பதை இங்கு வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டியுள்ள இணக்கப்பாடுகளின் அடிப்படையில் அரசாங்கம் கொள்கை ரீதியான ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது என்றும், அந்த ஸ்திரத்தன்மையின் அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு சாதகமான திசையில் செயற்படுவதாகவும் இங்கு குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டுக்கு நன்மை பயக்கும் முதலீடுகளுக்காக அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய ஆதக்கூடிய ஒத்துழைப்பை தொடர்ச்சியாக வழங்குவதாகவும், குறிப்பாக கொழும்பு துறைமுக நகர் வலயத்தை அபிவிருத்தி அடைந்த பொருளாதார வலயமாக்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் தெரிவித்தார்.

மேலும், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் சைனா ஹார்பர் நிறுவனம் வழங்கிய ஆதரவும் இதன்போது ஜனாதிபதியின் நன்றியுடன் கூடிய பாராட்டைப் பெற்றது.

தொழில் அமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோருடன், சைனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்தின் பொது முகாமையாளர் சூ போ உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(அ)

# 18 சீனர்கள் விளக்கமறியலில்!

கொழும்பு, ஜூன். 14

கம்பஹா கிரிபத்கொட - மாகொல பகுதியில் இணையவழி நிதி மோசடிகளில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட 18 சீன நாட்டவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மஹர நீதவான் நீதிமன்ற வளாகத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகளால் அண்மையில் நடத்தப்பட்ட அதிரடி சோதனையின் போதே இந்தச் சீன நாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இணையவழி நிதி மோசடிகள், ஆவணங்களை மோசடியாகத் தயாரித்தல் மற்றும் வரிச் செலுத்தப்படாத வெளிநாட்டு சிகரெட்டுகளை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து அமெரிக்காவின் கலிபோர்னியா மற்றும் கொலராடோ மாநிலங்களின் பெயரிலான பல போலி ஆவணக் கடிதங்களும், அந்தப் போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பல ரப்பர் முத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(அ)

# சுரேஷ் சாலேயுக்காக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிய முன்னாள் எம்.பி.க்கள்

கொழும்பு, ஜூன். 14

'சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவோம்' என்ற தலைப்பில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தடுப்புக் காவலில் உள்ள முன்னாள் புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சாலே கொடூரமான முறையில் நடத்தப்படுவதாக சமூகத்தில் எழுந்துள்ள விவாதங்களின் அடிப்படையிலேயே இந்த கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தடுப்புக் காவலில் இருந்த உங்களது கட்சியின் ஸ்தாபகர் ரோஹண விஜேவீர படுகொலை செய்யப்பட்டு, உயிர் பிரிவதற்கு முன்பாகவே மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான யுகத்தின் கொடூரமான வடுக்கள், இந்த ஜனநாயக நாட்டின் மீது மீண்டும் பதிவாகக்கூடாது என்பது அனைவரதும் மாறாத நம்பிக்கையாகும் என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, ஜனாதிபதி முன்னிலையில் வைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் சமநிலையான முறையில் ஆராய்ந்து, முன்னாள் புலனாய்வுப் பிரிவு பிரதானியையும் ஒரு சாதாரண சந்தேக நபராகக் கருதி, சட்டத்தின் முன்னிலையிலான சமத்துவத்தை அவருக்கு வழங்குவதை உறுதி செய்வதில் உங்களது அன்பான கவனத்தை செலுத்துமாறு அந்தக் கடிதத்தின் மூலம் ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, சட்டத்தரணி டிலான் பெரேரா, டி.பி. ஹேரத், கலாநிதி குணபால ரத்னசேகர, கரு கொடித்துவக்கு, வைத்தியர் திலக் ராஜபக்ஷ, வைத்தியர் உபுல் கலப்பத்தி, லலித் எல்லாவல மற்றும் கே.பி.எஸ். குமாரசிறி ஆகியோர் இக்கடிதத்தில் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

(அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முஸ்லிம் சமூகத்துக்கு நீதி கோரி பொதுஜன பெரமுன பேசுவதில்லை

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 14
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், குண்டுத் தாக்குதலின் பின்னர் வெறுப்பு பேச்சுக்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தினருக்கும் நீதி கோரி பொதுஜன பெரமுன ஏன் பேசுவதில்லை. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்த பின்னர் தான் சுரேஷ் சாலே பற்றி பொதுஜன பெரமுனவினர் கருத்து தெரிவிக்கிறார்கள். சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நடைபெற்ற இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழான விதிகள், குறைநிரப்பு மதிப்பீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள், சுரேஸ் சலே கைது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மாத்திரம் தான் எதிர்மறையான கருத்துக்களை பாராளுமன்றத்திலும், பொது இடங்களிலும் குறிப்பிடுகிறார்கள். முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, கோட்டபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவி வகித்தார்கள்.

அக்காலப்பகுதியில் முன்னெடுக்கப்படாத விசாரணைகள் தற்போது சிறந்த முறையில் இடம்பெறுகின்றன என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். எதிர்க்கட்சியினரும் நன்கு அறிவார்கள். அதனால் தான் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்மறையான கருத்துக்களை தற்போது குறிப்பிடுவதில்லை.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் பாராளுமன்ற உரையில் வழக்குகளை விசாரணை செய்துள்ளார். 'கௌரவமிக்க சாலே நாட்டில் இருக்கவில்லை' என்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் சாமர மாதுகொட குறிப்பிடுகிறார். ஆகவே விசாரணை அதிகாரிகளுக்கு இனி வேலையில்லை. நாமல் ராஜபக்ஷ, சாமர மாதுகொட நீதிமன்றம் சென்று இவற்றை குறிப்பிடலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த 278 பேர் மற்றும் படுகாயமடைந்தவர்கள் பற்றி இவர்கள் ஏதும் பேசுவதில்லை. குண்டுத்தாக்குதலின் பின்னர் இந்த நாட்டில் வாழ்ந்த முஸ்லிம் சமூகம் மீது திட்டமிட்ட வகையில் வெறுப்புணர்வு தூண்டிவிடப்பட்டது. பலர் நாட்டில் வாழ முடியாமல் நாட்டை விட்டு வெளியேறினார்கள். இவர்களுக்கு நீதி கிடைக்க கூடாதா, இவர்கள் பற்றி பொதுஜன பெரமுனவினர் ஏன் பேசுவதில்லை.

சுரேஷ் சாலேவை விடுவிக்கும் வரை சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் நீர்கொழும்பில் இருந்து கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக வருவதாக தெரிந்தவுடன், போராட்டத்தை இடைநடுவில் நிறுத்தி விட்டுச் சென்றார்கள். மக்களின் உணர்வுகளை குறைத்து மதிப்பட வேண்டாம் என்று குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

கோட்டாபயவுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்த பின்னர் தான் சுரேஸ் சலே பற்றி பொதுஜன பெரமுனவினர் பேசுகிறார்கள். கலக்கமடைய தேவையில்லை. விசாரணைகள் ஊடாக பல விடயங்கள் வெளிவரும்-என்றார். (அ)

# டெங்கு நோயாளர்களினால் நிரம்பும் வைத்தியசாலைகள்

கொழும்பு, ஜூன். 14
இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதன் காரணமாக, நாட்டின் பல மருத்துவமனைகள் தங்களின் கொள்ளளவை விடவும் அதிகமாக நிரம்பியுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது

இந்த டெங்கு பரவல் காரணமாக இதுவரை 21 பேர் உயிரிழந்துள்ளதாகவும், அவர்களுள் ஐந்து பாடசாலை மாணவர்களும் அடங்குவதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தற்காலிக பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கர குறிப்பிட்டார்.

நாடு தழுவிய ரீதியில் அதிகரித்து வரும் இந்த ஆபத்தான நிலையைத் தொடர்ந்து, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது

இந்த விசேட தூய்மைப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வுத் திட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை பொது இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சாதாரண, உயர்தரப் பரீட்சைகள் முன்னர் திட்டமிட்டபடி நடைபெறும்

கொழும்பு, ஜூன். 14
2026 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள், முன்னதாக அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின்படி உரியத் தினங்களில் நடைபெறும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய, பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை முழுமையாகக் கற்பித்து மாணவர்களைத் தயார்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பாடசாலைகள் மேற்கொள்ளவேண்டும் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாடத்திட்டங்களை நிறைவு செய்வதில் தாமதம் காணப்படும் பாடசாலைகள், மேலதிக நேரத்தை ஒதுக்கி தேவையான திட்டமிடலுடன் செயற்பட்டுப் பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதம் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# குடும்பஸ்தர் சிறையில் உயிரிழப்பு; 2 பொலிஸார் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன். 14
குடும்ப பிரச்னை ஒன்றிற்காக கைது செய்யப்பட்டு சிறைக்கூடத்தில் அடைத்து வைக்கப்பட்ட குடும்பஸ்தரின் உயிரிழப்பு தொடர்பான விசாரணை இடம்பெற்று வரும் நிலையில் சம்பவ தினத்தில் கடமையாற்றிய இரு பொலிஸ் சார்ஜன்ட்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் குடும்பப் பிரச்னை ஒன்றிற்காக கைது செய்யப்பட்டு பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்த நடவடிக்கைகளை இலங்கை பொலிஸ் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய சம்பவம் இடம்பெற்றவேளை கடமையில் இருந்த இரு பொலிஸ் சார்ஜன்ட்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். ஐ.பி ஜெயரட்ணவுக்கும் உள்ளக விசாரணை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் குறித்த விசாரணையானது கிழக்குப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தரவின் பணிப்பரைக்கமைய, அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் உத்தரவிற்கமைய அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரி ஆராய்ச்சி வழிநடத்தலில் அக்கரைப்பற்று பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.என்.பி டந்தநாராயண நெறிப்படுத்தலில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் உயிரிழந்த குடும்பஸ்தர் 65 வயது மதிக்கத்தக்க 6 பிள்ளைகளின் தந்தையான காரைதீவு 1 பிரிவு மாதவி வீதியைச் சேர்ந்த சாமித்தம்பி பாக்கியராசா ஆவார். (அ)

# தேவைகளுக்குப் பொருந்தாத தற்போதைய கல்வி முறைமை

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 14
இலவசக் கல்வியும் இலவச சுகாதார சேவையும் இலங்கை நலன்புரி அரசின் முக்கிய அடித்தளமாக விளங்கினாலும், தற்போதைய கல்வி முறைமையானது ஆண்டுதோறும் தொழில் சந்தையின் தேவைகளுக்குப் பொருந்தாத, வேலைவாய்ப்பு பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளையே உருவாக்கி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா சர்வதேச விவகாரங்கள் நிறுவனத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். அவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனப்பாடம் செய்யும் கல்வி முறை உட்பட பாடசாலை பாடத்திட்டங்களில் காணப்படும் பொருத்தப்பாடின்மை, மொழி உரிமைகள் அரசியல்மயமாக் கப்பட்டிருப்பது கல்வித் துறையை பின்னோக்கிப் பாதிக்கின்றன.

நாட்டில் 10,000 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் அமைந்து காணப்பட்டாலும், இவற்றில், தேசிய பாடசாலைகளும் முன்னணி பாடசாலைகளும் மாத்திரமே அதிக வளங்களையும் வசதிகளையும் அனுபவிக்கின்றன.

பெரும்பாலான பாடசாலைகள் இன்னும் குறைந்த வசதிகளுடனேயே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. நலன்புரி அரசின் நோக்கம் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதாக அமைந்து காணப்பட்ட போதிலும், தற்போது அந்த முறைமைக்குள்ளேயே ஏற்றத்தாழ்வுகள் மேலும் விரிவடைந்து காணப்படுகின்றன.

ஆகையினால், கல்வித் துறையில் நிலவும் கட்டமைப்பு ரீதியான இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், முதலீட்டிற்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சியையும் போட்டித்திறனையும் வலுப்படுத்துவது மிக அத்தியாவசியமானது-என்றார்.

அவுஸ்திரேலியா சர்வதேச விவகாரங்கள் நிறுவனத்தின் விக்டோரியா கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கைக்கான ஆய்வுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள இப்பிரதிநிதிகள் குழு, இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார மற்றும் சமகால சமூக நிலவரங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டது. (அ)

# நீதியரசர்களின் வெற்றிடங்களை நிரப்புமாறு சபாநாயகருக்கு கடிதம்

## எதிர்க்கட்சி எம்.பிக்கள் கையளித்தனர்

கொழும்பு, ஜூன். 13
உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலவும் நீதிபதி பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து கவனம் செலுத்தி, அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கக் கோரி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் வைத்து இக்கடிதம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சபையின் தலைவர் என்ற ரீதியில், இக்கருத்துகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்குமாறு கோரியே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இக்கடிதத்தை சபாநாயகரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
14.06.2026 ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஹிப்ஹொப் சங்கீயின் பிணை விடுதலைக்கு உரிமை கோரும் பல தரப்புகள்

விடுதலை புலிகளைப் போற்றும் பாடலைப் பாடியதற்காக இந்த மாத தொடக்கத்தில் கைதாகி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த ஹிப்ஹொப் சங்கீ என்று கூறப்படும் சந்த இசைக் கலைஞர் சங்கீத்சன் கணேஷ்குமார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் தரப்பினரும் சட்டத்தரணிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் அவரது விடுதலையில் தத்தமது பங்களிப்புகள் மற்றும் தலையீடுகளை குறித்து உரிமைகோரி வருகின்றனர்.

சங்கீத்சனின் விடுதலைக்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் குரலெழுப்பப்பட்டதன் காரணமாக அவருக்கு எதிரான வழக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் இருந்து நீக்கி சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் கொண்டு வருவதற்கு தங்களின் முயற்சிகளே உந்துசக்தியாக இருந்ததாக பல தரப்பினரும் உரிமை கோருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கிளிநொச்சியில் மக்களைத் அணிதிரட்டி போராட்டத்தை நடத்தியிருந்தார். ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான உட்பட அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு பேசி சங்கீத்சனை பிணையில் விடுவிக்குமாறு சிறீதரன் வலியுறுத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழரசு கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் சாணக்கியன் இராசமாணிக்கமும் கிளிநொச்சி சந்த இசைக்கலைஞரின் கைதையும் தடுப்புக் காவலையும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கடுமையாகக் கண்டனம் செய்து அவரின் விடுலையைக் கோரினர்.

அதேவேளை, தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சங்கீத்சனின் கைதுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்யப்போவதாக அறிவித்திருந்தார். முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கேசவன் சயந்தன் சங்கீத்சனுக்காக நீதிமன்றில் முன்னிலையாகி வாதாடினார். இத்தகைய நகர்வுகளே வழக்கை பயங்கரவாத தடைச்சட்ட ஏற்பாடுகளில் இருந்து விலக்கி சாதாரண தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் முன்னெடுத்துச் செல்ல சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சம்மதிக்க வைத்து இறுதியில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் சங்கீத்சனுக்கு பிணை வழங்குவதற்கு காரணமான சட்டத் திருப்புமுனையாக அமைந்ததாக கருதப்படுகிறது.

இதனிடையே, எதிர்பாராத ஒரு நகர்வாக ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் வாரிசுவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சங்கீத்சனின் தடுப்புக்காவலை விமர்சித்திருந்ததுடன் அரசாங்கம் சட்டத்தை "தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதாக" குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறாக பல தரப்பினரும் குரலெழுப்பியதன் காரணமாக வெளியில் வந்திருக்கும் சங்கீத்சன் இன்று உள்நாட்டிலும் வெளியுலகிலும் பிரபல்யமாக ஒரு கலைஞராக மாறிவிட்டார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அன்றி சாதாரண தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கை எதிர்நோக்க வேண்டியவராக இருக்கிறார்.

தமிழ்த் அரசியல்வாதிகள் சங்கீத்சனை தமிழ்த் தேசியவாத விடுதலை உணர்வின் இன்றைய இளந்தலைமுறை கலைத்துறை அடையாளமாகக் காண்பித்தார்கள். அதேவேளை, அவர் பிணையில் வெளியில் வருவதற்கு தாங்களும் காரணமாக இருந்ததாக உரிமைகோரும் கடற்தொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திசேகர் சங்கீத்சன் இனிமேல் சமூக விழிப்புணச்சிப் பாடல்களைக் இசைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். சங்கீதசன் இனிமேல் எத்தகைய பாடல்களைப் பாடப் போகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்ப்போமே.

# போர்க்கால இலக்கியம்; குண்டுவெடிப்புகள் தொடங்கும்போதும் வார்த்தைகள் மரணிப்பதில்லை

எழுத்தாளர்கள் மோதல்களின் கொடூரங்களை வெறும் ஆவணமாகப் பதிவு செய்வது மட்டுமல்ல, அவர்கள் அதற்கப்பால் உருவாக வேண்டிய ஒரு எதிர்காலத்தைப் பற்றியும் பேசுகிறார்கள்.

கடந்த வாரம், வான்வழித் தாக்குதல் அபாயங்களையும் பொருட்படுத்தாமல், எழுத்தாளர்களின் உரைகளைக் கேட்பதற்காக ஆயிரக்கணக்கான வாசகர்கள் உக்ரெயின் தலைநகர் கிவ்வில் நடந்த இலக்கிய விழா ஒன்றில் கூடினர். நான்கு ஆண்டுகால கொடூரமான போர், எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான அவர்களின் ஆர்வத்தை அழித்துவிடவில்லை, மாறாக அதை மேலும் தூண்டியுள்ளது.

உக்ரேனிய கலாச்சாரத்தையும் அதன் மூலம் அவர்களின் அடையாளத்தையும் அழிப்பதற்காக ரஷ்யா மேற்கொண்டு வரும் விரிவான முயற்சிகள் உலகளவில் பரவலான கவனத்தைப் பெற்றுள்ளன. முழு அளவிலான ஆக்கிரமிப்பு தொடங்கிய முதல் மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே 700-க்கும் மேற்பட்ட நூலகங்கள் சேதமடைந்தன அல்லது முற்றிலுமாக அழிக்கப்பட்டன.

ஆனால், இந்த அடக்குமுறைதான், இதற்கு முன்னர் சந்தையை ஆக்கிரமித்திருந்த ரஷ்ய இலக்கியங்கள் மற்றும் ரஷ்ய மொழிப் புத்தகங்களில் இருந்து விலகிச் செல்வதற்கான முயற்சிகளையும் உந்தித்தள்ளியுள்ளது. நாட்டின் எல்லைகளுக்கு வெளியே பொதுவாகக் கவனம் பெறும் போரின் சக்திவாய்ந்த ஆவணப் பதிவுகளையும் தாண்டி, உக்ரேனிய இலக்கியமும் பதிப்பகத்துறையும் புதிய சோதனைக் முயற்சிகளுக்கான களமாக வளர்ந்து செழித்தோங்கியுள்ளன.

புதிய படைப்புகள், போர்க்களத்தில் இருப்பவர்களுக்கும், வீடுகளில் பாதுகாப்பாக இருப்பவர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் முயல்கின்றன.

கலாச்சாரம் என்பது அடையாளத்தையும் நினைவகத்தையும் தக்கவைப்பதால், போர் எப்போதுமே கலாச்சாரத்தை அழிக்க முயல்கிறது. இலக்கியம் என்பது போரினால் பாதிக்கப்படும் ஒரு பொருள் மட்டுமல்ல, அது உயிர்வாழ்வதற்கும், எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கும், சாட்சியமளிப்பதற்கும் சில நேரங்களில், ஒரு நல்ல புகலிடமாக இருப்பதற்கும் பயன்படும் ஒரு கருவியாகும்.

2023 ஆம் ஆண்டில் சூடானில் உள்நாட்டுப் போர் வெடித்தபோது, டார்பூரில் உள்ள நியாலா (Nyala) நகரின் வசிப்பவர் ஒருவர், பாதிக்கப்பட்ட தனது அண்டை வீட்டாருக்குத் தான் செய்யக்கூடிய சிறந்த விடயம், மூடப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட நூலகங்களுக்குப் பதிலாக தனது சொந்த நூலகத்தைத் திறந்து வைப்பதே என்று முடிவு செய்தார். அது அவர்கள் ஒடுக்குமுறை நிறைந்த யதார்த்தத்திலிருந்து தற்காலிகமாக தப்பிக்க உதவியது.

"குண்டுவெடிப்பு, சூறையாடல், திட்டமிட்ட அழிவு - ஆட்சியாளர்களின் பேராசைக்காக புத்தகங்கள் விலை கொடுக்க வேண்டியிருக்கும் போது, போர்க்கால புத்தகங்களைப் பற்றி எழுதப்படும் முதன்மையான கதையாடல்களாக இவையே அமைகின்றன.

ஆனால், இதில் இதைவிட மேலான விடயங்கள் உள்ளன" என்று வரலாற்றாசிரியர் ஆண்ட்ரூ பெட்டெக்ரி (Andrew Pettegree) எழுதியுள்ளார்.

அவர் புத்தகங்களை "பாதிக்கப்படுபவையாகவும் அதே நேரத்தில் முதன்மைக் கதாபாத்திரங்களாகவும்" சித்தரிக்கிறார்.

பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட் 1942-ஆம் ஆண்டில் இதை இன்னும் சுருக்கமாகக் கூறினார்: "புத்தகங்கள் ஆயுதங்கள்" -என்றாலும் அவை எப்போதும் நல்ல நோக்கங்களுக்காக மட்டுமே ஏந்தப்படுவதில்லை

மியான்மரில், கொடூரமான போரை நடத்தி வரும் இராணுவ ஆட்சியால் இலக்கு வைக்கப்படுபவர்களில் கவிஞர்களும் பிற எழுத்தாளர்களும் அடங்குவர். பிரிட்டிஷாருக்கு எதிரான காலனித்துவ எதிர்ப்புப் போராட் டம் உட்பட, அங்குள்ள அரசியலில் கவிதை நீண்ட காலமாக முக்கியப் பங்கு வகித்துள் ளது. 2015 தேர்தல்களில் ஆங் சான் சூகியின் "தேசிய ஜனநாயக லீக்" கட்சி அமோக வெற்றி பெற்றபோது, அதன் பாராளுமன்ற உறுப்பினர்களில் 11 பேர் கவிஞர்களாக இருந்தனர்.

இதற்கு முன்பு அமைதியை விரும்பிய கவிஞரான மாங் சாங்கா (Maung Saungkha), 2022 இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து துப்பாக்கி ஏந்திய பல இளம் எழுத்தாளர்களில் ஒருவராவார். அவரது இந்த பயணம், சமீபத்திய புத்தகமான 'Frontline Poets: The Literary Rebels Taking on Myanmar's Military' என்பதில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இது அவர்களின் வாழ்க்கைக் கதைகளுடன்




அவர்களின் எழுத்துக்களையும் ஒருங்கிணைத்துக் கூறுகிறது.

தொலைதூர தேசத்தில் நடக்கும் கொடூரங்களையும் அழிவுகளையும் ஆவணப்படுத்துபவர்களாக மட்டுமே தங்களை வெளி உலக வாசகர்கள் பார்ப்பதற்கு எதிராக எழுத்தாளர்கள் பெரும்பாலும் போராட வேண்டியிருக்கிறது.

காசா போரின் முதல் நான்கு மாதங்களுக்குள் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் கவிஞர்களான சலீம் அல்-நபார், ரெஃபாத் அலாரீர் மற்றும் ஹிபா அபு நடா உட்பட குறைந்தது 45 கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலாச்சார ஆர்வலர்கள் கொல்லப்பட்டனர்.

ஆயினும்கூட, லெபனான்-அமெரிக்க மொழிபெயர்ப்பாளரும் கல்வியாளருமான ஹூடா ஃபக்ரெடின் (Huda Fakhreddine) பின்வருமாறு கூறியுள்ளார்.

"பாலஸ்தீனியர்கள் கொல்லப்படும்போதோ அல்லது வதைக்கப்படும்போதோ மட்டுமே அவர்களுக்குப் பக்கங்களில் இடமளிப்பது நமக்கு வெட்கக்கேடானது."

போருக்கு முன்பு, காசா உலகளவில் அதிக எழுத்தறிவு விகிதத்தைக் கொண்ட இடங்களுள் ஒன்றாகவும், வளமான இலக்கியப் பாரம்பரியத்தையும், எட்டு பல்கலைக்கழகங்களையும் கொண்டதாக விளங்கியது.

பசியிலும் அவநம்பிக்கையிலும், இடிபாடுகளுக்கு மத்தியிலும் எழுதப்படும் கவிதைகள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள வாசகர்களைச் சென்றடையும் வல்லமை கொண்டவை.

"கேமராக்களால் எட்ட முடியாதவற்றையும், எண்களால் ஒருபோதும் விவரிக்க முடியாதவற்றையும்" கவிதை சாட்சியமாகப் பதிவு செய்கிறது என்று காசா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் மொழிப் பேராசிரியர் நஸ்மி அல்-மஸ்ரி (Nazmi al-Masri) குறிப்பிட்டுள்ளார். ஆனால், அது தற்போதைய சூழலைக் கடந்து, இப்போது அழிவை எதிர்கொண்டிருப்பவர்களுக்கான ஒரு சிறந்த எதிர்காலத்தை, ஒருவேளை நீதியைக்கூட கற்பனை செய்யத் துணிகிறது.

(த கார்டியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# தமிழர் வாழ்வியலின் எதிர்காலம்

மதிவதனி



மனித வரலாற்றின் ஒவ்வொரு காலமும் ஒரு புதிய வாழ்வியலை உருவாக்கியுள்ளது. கற்காலம் மனிதனின் உடல் உழைப்பை மையமாகக் கொண்டிருந்தது. வேளாண் யுகம் நிலம் மற்றும் பருவநிலையை மையமாகக் கொண்டிருந்தது. தொழில் புரட்சி இயந்திரங்களின் வேகத்தை மனித வாழ்க்கைக்குள் கொண்டு வந்தது. ஆனால், **21** ஆம் நூற்றாண்டு உருவாக்கிய எண்ம (டிஜிட்டல்) புரட்சி மனிதனின் வாழ்க்கை முறையை மட்டுமல்ல, அவனுடைய நினைவகத்தையும், அடையாளத்தையும், உறவுகளையும், கலாசார அனுபவத்தையும் மாற்றி வருகிறது. இந்த மாற்றத்தின் மையத்தில் நிற்கும் ஒரு பழைமையான மொழிச் சமூகமே தமிழர் சமூகம்.

தமிழர் வாழ்வியல் என்பது வெறும் பழக்கவழக்கங்களின் தொகுப்பு அல்ல. அது இயற்கை, நிலம், உறவுகள், மொழி, கலை, ஆன்மிகம், உழைப்பு, நினைவகம் ஆகியவற்றின் கூட்டு அமைப்பு. தமிழர் சமூகத்தின் பாரம்பரியம் நூல்களில் மட்டும் இருந்ததில்லை. அது அன்றாட வாழ்வின் இயக்கமாக இருந்தது. வீட்டின் வாசலில் வரையப்பட்ட கோலம் முதல் கோயில் திருவிழா வரை, அம்மாவின் சமையலறை முதல் பாட்டியின் கதைகள் வரை அனைத்தும் ஒரு சமூக நினைவகத்தின் பகுதிகளாக இருந்தன.

ஆனால், தொழில்நுட்ப உலகம் இந்த வாழ்வியலின் அடிப்படை அமைப்புகளையே மாற்றத் தொடங்கியது. முன்பு மனிதர்கள் நேரடியாகச் சந்தித்து உரையாடினர் இன்று திரைகளின் வழியாகப் பேசுகிறார்கள். முன்பு நினைவுகள் மனதில் சேமிக்கப்பட்டன. இன்று அவை 'கிளவுட்' சேமிப்பகங்களில் இருக்கின்றன. இந்த மாற்றம் வெறும் தொழில்நுட்ப மாற்றமல்ல. அது மனித அனுபவத்தின் இயல்பை மாற்றுகிறது.

தமிழர் சமூகத்தில் திருவிழா என்பது தனிநபரின் நிகழ்வு அல்ல. அது ஒரு சமூகத்தின் உயிரோட்டம். ஆனால், எண்ம (டிஜிட்டல்) உலகம் இந்தக் கூட்டு அனுபவங்களை மெல்ல தனி நபர் அனுபவங்களாக மாற்றுகிறது. ஒரே வீட்டில் வாழும் மனிதர்கள்கூட தனித்தனி திரைகளின் உலகில் வாழ்கிறார்கள்.

மொழியும் இந்த மாற்றத்தின் தாக்கத்தை எதிர்கொள்கிறது. தமிழ் மொழி இன்று சமூக ஊடகங்களின் உலகில் புதிய வடிவங்களை அடைகிறது. தமிழ் ஆங்கில கலப்பு மொழி பெருகுகிறது. குறுகிய சொற்கள், "மீம்" கலாசாரம், எண்ம நகைச்சுவைகள் மொழியின் பயன்பாட்டை மாற்றுகின்றன. இதனால், மொழியின் தூய்மை அழிகிறது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், இன்னொரு பக்கம் பார்க்கும்போது இது மொழியின் உயிர்வாழும் திறனாகவும் இருக்கலாம்.

பழமொழிகள், நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு ஆகியவை மனித குரலின் வழியாக தலைமுறைகளுக்குப் பரவின. இன்று அந்த வாய்மொழி உலகம் எண்ம வடிவங்களுக்கு மாறுகிறது. பாட்காஸ்ட்கள், யூடியூப் சேனல்கள், ரீல்ஸ், குறும்படங்கள் ஆகியவை புதிய கதை சொல்லும் கருவிகளாக மாறியுள்ளன.

இதை முழுமையாக எதிர்மறையாக மட்டும் பார்க்க முடியாது. காரணம், மறைந்து போகும் நிலையில் இருந்த பல கலைகளுக்கு இந்த எண்ம வடிவங்களே புதிய உயிர் கொடுத்துள்ளன. எண்ம உலகம் பாரம்பரியத்தை அழிப்பதில்லை, அதை மறுவடிவமைக்கிறது.

இன்றைய தலைமுறை இந்த மாற்றத்தின் மையத்தில் உள்ளது. இளைஞர்கள் பாரம்பரியத்தை மறந்துவிட்டார்கள் என்று பலர் கூறுகின்றனர். ஆனால், உண்மையில் அவர்கள் பாரம்பரியத்தை வேறொரு வடிவில் அனுபவிக்கிறார்கள். உலகமயமாக்கல் மனிதர்களை ஒரே மாதிரியான நுகர்வு கலாசாரத்துக்குள் தள்ளியபோது, பல இளைஞர்கள் தங்களுடைய வேர்களை மீண்டும் தேடத் தொடங்கினர். உலகம் முழுவதும் ஒரே மாதிரியான இசை, உடை, உணவு, திரைப்படங்கள் பரவியபோது, நாம் யார்? என்ற கேள்வி மீண்டும் முக்கியமானது. தமிழ் இளைஞர்களிடையே தமிழ் மொழி, ஜல்லிக்கட்டு, பாரம்பரிய உணவு, நாட்டுப்புற இசை, பழைய வரலாறு ஆகியவற்றின் மீதான புதிய ஈர்ப்பு இதன் விளைவாகும்.

ஆனால், இந்த ஈர்ப்பு பழைய பாரம்பரியத்தை அப்படியே மீட்டெடுப்பதில்லை. மாறாக, அது பாரம்பரியத்தை செம்மைப்படுத்துகிறது. ஒரு நாட்டுப்புறக் கதை அனிமேஷனாக மாறுகிறது. ஒரு பழமொழி "மீமாக" மாறுகிறது. ஒரு பாரம்பரியக் கலை எண்ம வடிவமைப்பாக மாறுகிறது.

ஆனால், இந்த மாற்றம் சில ஆபத்துகளையும் உருவாக்குகிறது. எண்ம உலகம் வேகத்தை விரும்புகிறது; ஆனால், ஆழத்தை விரும்புகிறது பாரம்பரியம். சமூக ஊடகங்கள் மனிதர்களின் கவனத்தை சில விநாடிகளில் பிடிக்க முயல்கின்றன. இதனால், பாரம்பரியத்தின் சிக்கலான அர்த்தங்கள் மிக எளிமைப்படுத்தப்பட்ட காட்சிகளாக மாறுகின்றன. ஒரு திருவிழாவின் ஆன்மிக மற்றும் சமூக அர்த்தங்கள் மறைந்து, அதன் வண்ணமயமான புகைப்படங்கள் மட்டும் வைரலாகின்றன. இது கலாசாரத்தை அனுபவ வாழ்வியல் நிலையிலிருந்து காட்சி நுகர்வு நிலைக்கு தள்ளுகிறது.

முன்பு கலாசாரம் வாழப்பட்டது. இன்று அது பதிவு செய்யப்படுகிறது. ஒரு திருவிழாவை அனுபவிப்பதை விட அதை சமூக ஊடகங்களில் பகிர்வது முக்கியமாகிறது. ஒரு உணவைச் சாப்பிடுவதற்கு முன்பாக அதன் புகைப்படத்தை எடுப்பது வழக்கமாகிறது. இதனால், மனித அனுபவத்தின் இயல்பே மாறுகிறது.

அதே நேரத்தில் எண்ம உலகம் தமிழர் அடையாள அரசியலுக்கும் புதிய வடிவங்களை வழங்குகிறது. சமூக ஊடகங்கள் தமிழ் மொழி, பாரம்பரியம், வரலாறு ஆகியவற்றின் மீதான புதிய விழிப்புணர்வை உருவாக்குகின்றன. ஜல்லிக்கட்டு போராட்டம் இதற்கான முக்கிய எடுத்துக்காட்டு. அது வெறும் விளையாட்டு தொடர்பான

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்தவார ராசிபலன் 14.06.2026 - 20.06.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 31
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அமாவாசை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. நாள்பட்ட பிரார்த்தனைகள் நிறைவேறும். குடும்பத்துடன் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிவரும். உடல் நிலையில் முன்னேற்றம் இருக்கும். பொருளாதார நிலை ஏற்ற இறக்கத்துடன் இருக்கும். குடும்பத்தினரின் விருப்பங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்படுவீர்கள். வண்டி. தடைப்பட்டு வந்த காரியங்களை மீண்டும் தொடங்க முடியும். உத்யோகத்தில் பணிகளை விரைந்து முடிக்கவும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்கரிஷப ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. குடும்ப பெருமையை உயர்த்த வழி கிடைக்கும். ஞாபக மறதித் தொல்லை அடிக்கடி ஏற்படும். அக்கம் பக்கம் உள்ளவர்களின் ஆதரவு பெருகும். கடன் பிரச்சனை படி படியாக குறைய தொடங்கும். மேற்கொண்டு கடன் வாங்கும் சூழல் இருக்காது. பெற்றோர்கள் நலனில் அக்கறைகொள்ளவும். குடும்பத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் குறையும். மனதில் நினைத்த காரியம் எளிதில் நடக்கும். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. தொழில். வியாபாரம் செழிப்படையும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. மனதில் இருந்த எண்ணங்களும். திட்டங்களும் நல்ல முறையில் செயல்படும். சுய முயற்சியால் வாழ்வில் முன்னேற்றம் அடைய முடியும். குடும்பத்தில் பேராதரவை பெற முடியும். உடன்பிறப்புகளிடம் கருத்து வேறுபாடு தோன்றி மறையும். கணவன் மனைவிடையே அன்யோன்யம் ஏற்படும். உடல் உபாதைகள் நீங்கும். விருந்து. விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியும். தேவையற்ற செலவுகள் ஏதும் செய்யாமல் பார்த்துக்கொள்ளவும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகளை ஏற்பட்டாலும், வாழ்க்கைத்துணைவர் பக்கபலமாக இருந்து செயல்படுவர். தான. தர்ம காரியங்களுக்கு செலவழிக்க வேண்டியிருக்கும். நெருங்கிய உறவினர்களுடன் சுமுக உறவு காணப்படும். புதிய வீடு. நிலம் போன்றவற்றை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மற்றவர்களின் ஆலோசனைக்கு செவி சாய்பதை தவிர்க்கவும். உத்யோகத்தில் சில சலுகைகள் கிடைக்கும். தொழில். வியாபாரத்தில் மந்த நிலை இருக்கும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. குடும்பத்தில் சற்றும் எதிர்பார்க்காத விஷயங்கள் நடக்கும். உடல் நலம் சீரான நிலையில் இருக்கும். உற்றார். உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும். கோர்ட் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வாகனத்தில் மெதுவாக செல்லவும். குடும்பத்தில் வீண் செலவுகள் எதுவும் இல்லாமல் பார்த்து கொள்ளவும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உத்யோகத்தில் பொறுமை அவசியம். தொழில். வியாபாரத்தில் புது முதலீட்டை தவிர்க்கவும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. புதிய முயற்சிக்கு சாதகமான பலன் கிடைக்கும். வெளியில் கடன் வாங்கி செலவு செய்வதை தவிர்க்கவும். எதிர்பார்த்த சில நல்ல விஷயங்கள் நடக்காமல் போகும். கணவன் மனைவிடையே விட்டு கொடுத்து செல்வதன் மூலம் தேவையற்ற சண்டை சச்சரவுகளை தவிர்க்கலாம். குடும்பத்தினரின் நிறைவேற்ற முடியும். மனக்குழப்பங்கள் படிப்படியாக குறையும். [illegible] வாய்ப்புண்டு. தொழில். வியாபாரத்தில் போட்டி இருக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. குடும்ப பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். திட்டமிடாத பிரயாணத்தால் சற்றே சிரமப்பட வேண்டியிருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரித்து காணப்படும். வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். கணவன் மனைவிக்குள் நல்ல ஒற்றுமை இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள நல்ல வாய்ப்புகள் வரும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. நீண்ட நாட்களாக இழுபறியில் இருந்த சீக்கிரத்தில் முடிவடையும். திட்டமிட்ட செயல்களை சிறப்பாக செய்து முடிக்க முடியும். புது வீடு மாற்றம் ஏற்படும். நண்பர்கள் சில நேரங்களில் எதிராக செயல்படலாம். பெற்றோர்களின் நலனில் அக்கறைகொள்ளவும். வண்டி. வாகனங்களை இயக்கும் போது கவனம் தேவை. விலகி நின்றவர்கள் கூட விரும்பி வந்து இணைவர். உத்யோகத்தில் ஆதரவு பெருகும். தொழில். வியாபாரத்தில் உள்ள சூட்சமங்கள் புரியவரும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுவதில் சிரமம் இருக்கும். நீங்கள் திட்டமிட்டது ஒன்றாகவும். நடப்பது ஒன்றாகவும் இருக்கும். குடும்பத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். பொருளாதார சிரமங்கள் வெகுவாகக் குறைந்து சேமிப்பு உயர்வடையத் துவங்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெரும். வாகனம் யோகம் உண்டு. பயணங்களை அலைச்சல் ஏற்படும். வெளியிடங்களில் வீண் விவாதங்களை தவிர்க்கவும். உத்யோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. ஆன்மீகத்தில் ஈடுபாடு உண்டாகும். மனதில் பட்டதை தைரியமாக செய்ய முடியும். உடல் சோர்வு நீங்கி உற்சாகம் ஏற்படும். சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் தடைகளுக்குப் பின் வெற்றிகிட்டும். இனம்புரியாத கவலைகள் அவ்வப்போது வந்துபோகும். உடலுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த பொருளையும் சாப்பிட வேண்டாம். புது திட்டங்களை செயல்படுத்த முடியும். உத்யோகத்தில் உங்க கை ஓங்கும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி நேயர்களே. இந்த வார பலன்படி. மற்றவர்களிடம் பேசும் போது வார்த்தைகளில் மிகுந்த கவனம் தேவை. யாரும் நம்மை புரிந்துகொள்ளவில்லையே என்ற ஆதங்கம் இருக்கும். குடும்பத்தில் தேவையற்ற செலவுகளை தவிர்ப்பது நல்லது. கடன் விவகாரங்களில் அதிக கவனம் கொள்ள வேண்டியது அவசியம். உறவினர்கள் மத்தியில் மதிப்பு உயரும். குடும்ப நபர்களிடம் ஏற்பட்ட மனவருத்தம் நீங்கி சகஜ நிலைக்கு திரும்ப முடியும். உத்யோகத்தில் ஈகோ பிரச்னையை தவிர்க்கவும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி அன்பர்களே. இந்த வார பலன்படி. வெளிவட்டாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். மனக்கவலைகள் குறையும். குடும்பத்தில் பல புதுமையான விஷயங்கள் நடக்கும். குடியிருக்கும் வீட்டினை சீரமைக்க வேண்டிவரும். புது நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். எந்த விஷயத்திலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்ல பலனை தரும். யாருக்கும் ஜாமின் கையெழுத்து போட வேண்டாம். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். வெளிநாடு தொடர்பான விஷயங்களில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுரேஷ் சாலே விவகாரமும் சிங்கள தேசியவாத அரசியலும்!



வீரகத்தி தனபாலசிங்கம்

**ஈஸ்டர்** குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் ஒரு தொடர்ச்சியாக கடந்த பெப்ரவரி பிற்பகுதியில் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் (ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல்) சுரேஷ் சாலேக்கு அநீதி இழைக்கப்படுவதாக குற்றஞ்சாட்டி அவரது குடும்பத்தவர்கள் மற்றும் பௌத்த பிக்குமார் சகிதம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கடந்த வாரம் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டம் "தற்காலிகமாக" கைவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சாலே தடுப்புக்காவலில் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கியதையடுத்து உடல்நிலை பாதிக்கப்பட்டதனால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் முன்னெடுக்கப்பட்ட அந்த போராட்டத்தில் கடும்போக்கு சிங்கள பௌத்த தேசியவாத அரசியல்வாதிகள் என்று அடையாளப்படுத்தப்படும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில மற்றும் மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர ஆகியோர் முன்னரங்கத்தில் நின்றனர்.

ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன உட்பட சாலேக்கு ஆதரவாக கிளம்பியிருக்கும் அரசியல் கட்சிகள் அவரது தடுப்புக்காவலை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றே நோக்குகின்றன.

உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இலங்கையை உலுக்கிய மிகப்பெரிய பயங்கரவாதச் சம்பவமான ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்த சூத்திரதாரிகள் கண்டு பிடிக்கப்பட்டு பொறுப்புக்கூற வைக்கப்பட வேண்டும் என்பதில் அந்த கட்சிகளுக்கு அக்கறை இல்லை.

போரில் விடுதலை புலிகளைத் தோற்கடிப்பதில் முக்கிய பங்காற்றிய முன்னணி இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவரை தடுத்து வைத்து அவமதிப்பது நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பின் மனவுறுதியைக் குலைக்கும் என்று இந்த தேசியவாத அரசியல்வாதிகள் வாதிடுகிறார்கள்.

**தென்னிலங்கையில் மக்களை அணிதிரட்ட முடியாமல் அவை படுமோசமாகப் பலவீனமடைந்திருக்கின்றன. தங்களது அரசியல் மீட்சிக்கு மீண்டும் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலையே நம்பியிருக்கும் இந்த அரசியல் சக்திகள் வசதியாக உடனடியாகக் கிடைத்த சாலே விவகாரத்தையும் கையிலெடுத்து முயன்று பார்க்கின்றன.**

போரில் வெற்றிபெற்ற பாதுகாப்பு படைகளைச் சேர்ந்தவர்கள் குற்றங்களைச் செய்தாலும் கூட விசாரணைக்கு உள்ளாக்கப்படவோ தண்டிக்கப்படவோ கூடாது என்ற தொனியைக் கொண்டதாக இந்த வாதம் இருக்கிறது. பாதுகாப்பு படைகளை "பாதுகாக்கப்பட்ட" ஒரு நிறுவனமாக இவர்கள் பார்க்கிறார்கள்.

அதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் உண்மையான சூத்திரதாரிகளை பாதுகாக்கும் உள்நோக்கத்துடனேயே இவர்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள் என்ற சந்தேகம் தற்போதைய அரசியல் விவாதங்களில் முக்கியத்துவம் பெறுகிறது.

சாலே கைது செய்யப்பட்ட பின்னரான மூன்று மாதங்களுக்கும் அதிகமான காலமாக அமைதியாக இருந்தவர்கள் அண்மையில் நீதிமன்றம் பிறப்பித்த ஒரு உத்தரவுக்கு பிறகு போராட்டத்தில் இறங்கியது அந்த சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

விசாரணையின் தடயங்கள் பலம் பொருந்திய நிறுவனங்களைச் சேர்ந்தவர்களையும் குறிப்பிட்ட ஒரு அரசியல் பிரிவினரையும் நோக்கித் திரும்பும் வேளைகளிலெல்லாம் கவனத்தை திசை திருப்பும் தந்திரோபாயங்கள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. கடந்த வாரத்தைய போராட்டங்களும் அதே கோணத்திலேயே பொதுவெளியில் பார்க்கப்படுகின்றன.

மிகவும் திட்டமிட்ட முறையில் ஒருங்கிணைந்து நடத்தப்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னால் இருந்த சூத்திரதாரிகளை கடந்த ஏழு வருடங்களாக அடையாளம் கண்டு தண்டனை வழங்குவதில் உள்ள தோல்வி ஏற்படுத்திய பெரிய வெற்றிடம் பல்வேறு சந்தேகங்கள் மற்றும் சதிக்கோட்பாடுகள் பற்றிய வாதங்களினால் நிரம்பியிருக்கிறது.

குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் கலாசாரத்தை ஒழிக்கப் போவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கிக் கொண்டு ஆட்சியதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் உட்பட பல்வேறு உயர்மட்ட வழக்குகள் குறித்து ஒளிவுமறைவு இல்லாததும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை துரிதமாக நடத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கிறது. அது தொடர்பில் கடுமையான நெருக்குதலும் அதற்கு இருக்கிறது.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விவகாரம் பெருமளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பது விசாரணைகளில் பல்வேறு குளறுபடிகளுக்கும் திசைதிருப்பல்களுக்கும் காரணமாக அமைகிறது. எதிர்க்கட்சிகளின் அணுகுமுறைகள் மெய்யான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு மாறாக, அரசியல் ஆதாயங் களுக்காக திசைதிருப்பல்களை நோக்கமாகக் கொண்டவையாக இருப்பதாக அரசாங்கத் தலைவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள்.



சாலே தனது தனிப்பட்ட கணினி மற்றும் கைப்பேசிக்கான கடவுச் சொற்களை வழங்க மறுத்துவிட்டார் என்றும் இவ்வாறாக அவர் ஒத்துழையாமல் இருப்பது விசாரணைகளுக்கு முட்டுக் கட்டை போடும் ஒரு முயற்சி என்றும் பொதுப் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த வாரம் பாராளுமன் றத்தில் கூறினார்.

தான் தீவிரமாக கண்காணிக்கப்படுவதை நன்கு அறிந்திருந்த முன்னாள் புலனாய்வுத் தலைவர் ஒருவர் தனக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய எந்தவொரு தகவலையும் தனது கைப்பேசியில் அல்லது தனிப்பட்ட கணினியில் சேமித்து வைத்திருப்பார் என்று எதிர்பார்க்க முடியுமா?

முறையான ஆதாரங்களின் அடிப்படையில் செயற்படுவதற்கு பதிலாக, குறிப்பிட்ட அரசியல் தளங்களை அல்லது சர்வதேச நெருக்குதல்களை திருப்திப்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரச புலனாய்வுப் பிரிவினரை இலக்கு வைப்பதாக எதிரணி அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

எது எவ்வாறிருந்தாலும், அரசியல்வாதிகள் ஒரு சூத்திரதாரியைப் பாதுகாப்பதற்காகவே அரசியல் நாடகங்களை அரங்கேற்றுகிறார்கள் என்று மக்கள் பரவலாக நம்புகிறார்கள். இதுகாலவரையில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளும் இதற்கு காரணம்.

அடுத்தடுத்து வந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள், குழு அறிக்கைகள் மற்றும் பொலிஸ் விசாரணைகள் பெரும்பாலும் ஒன்றிற்கொன்று முரணாக அமைந்ததாலும், முக்கியமான கேள்விகளுக்கு பதிலளிக்காமல் விட்டதாலும் உண்மைகள் அரசியல் உயர்மட்டத்தினரால் தீவிரமாக மறைக்கப்பட்டு வந்திருக்கின்றன என்ற பரவலான அபிப்பிராயம் இருக்கிறது.

பொதுவெளியில் நிலவும் கடுமையான சந்தேகத்தை அகற்றும் வகையில் தற்போதைய விசாரணைகள் முன்னேறுவதை உறுதிசெய்ய வேண்டிய முழுமையான பொறுப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இருக்கிறது.

ஆனால், தேசியவாத அரசியல் உணர்வுகளினால் எளிதில் மசிந்து விடக்கூடிய அரசியல் வரலாற்றைக் கொண்டது ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.). அதன் தலைமையில் அமைந்திருக்கும் இன்றைய அரசாங்கம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்கான விசாணைகளை துரிதப்படுத்துவதை தடுப்பதற்கு தேசியவாத உணர்வலைகளைக் கிளப்புவதையே ஒரு உத்தியாக சாலேக்கு ஆதரவான அரசியல் சக்திகள் பயன்படுத்த முனைகின்றன.

ஆனால், தென்னிலங்கையில் மக்களை அணிதிரட்ட முடியாமல் அவை படுமோசமாகப் பலவீனமடைந்திருக்கின்னன. தங்களது அரசியல் மீட்சிக்கு மீண்டும் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலையே நம்பியிருக்கும் இந்த அரசியல் சக்திகள் வசதியாக உடனடியாகக் கிடைத்த சாலே விவகாரத்தையும் கையிலெடுத்து முயன்று பார்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையின் புதிய அரசியல் யுகத்தில் நீதியும் ஜனநாயகமும்!



கலாநிதி ஜெகான் பெரேரா

பல ஆண்டுகளாகத் தீர்வு காணப்படாமல் திறந்த கேள்விகளாகவே நீடித்து வந்த, மிகவும் சர்ச்சைக்குரிய சில வழக்குகள் மீது சட்ட நடைமுறைகள் படிப்படியாகத் தீவிரமடைந்து வருகின்றன. 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள், 2015 ஆண்டின் மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் கடந்த இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட தசாப்தங்களாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களுடன் பின்னிப்பிணைந்த பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் ஆகியவை இதில் அடங்கும்.

ஒரு காலத்தில் முடங்கிப் போயிருந்ததாகத் தோன்றிய இந்த விசாரணைகள், தற்போது நீதிமன்றங்கள் மற்றும் புலனாய்வு அமைப்புகளின் மூலம் நகர்வுக்கான அறிகுறிகளைக் காட்டத் தொடங்கியுள்ளன.

அண்மைய முன்னேற்றங்கள், நீண்டகாலமாக இழுபறியிலிருந்த இந்த வழக்குகள் ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளதை உணர்த்துகின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையில், புதிய கைதுகளும் விசாரணைகளும், தாக்குதலை நடத்திய உடனடி நபர்களைத் தாண்டி, உளவுத்துறை தோல்விகள் மற்றும் சாத்தியமான அரசியல் உடந்தைகள் குறித்த கேள்விகள் மீதான கவனத்தை மீண்டும் ஈர்த்துள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் முன்னாள் உளவுத்துறைத் தலைவர் சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமை, இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள முழு உண்மையை வெளிக்கொண்டு வருவதில் பொதுமக்களின் ஆர்வத்தை தீவிரப்படுத்தியுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியும் மீண்டும் கவனத்திற்கு வந்துள்ளது. வழக்குத் தொடருவதைத் தடுத்து வந்த சட்டத் தடைகளை அண்மையில் நீக்கிய உயர் நீதிமன்றம், இந்த வழக்கை விரைவாக முன்னோக்கி நகர்த்துமாறு உத்தரவிட்டுள்ளது. இது நாட்டின் அண்மைய வரலாற்றில் மிகவும் அதிநவீன நிதி மோசடிகளில் ஒன்றை மீண்டும் கிளறியுள்ளதுடன், பல முக்கிய அரசியல் மற்றும் நிதித்துறையைச் சேர்ந்த பிரமுகர்களை மீண்டும் சட்டக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவந்துள்ளது.

இந்தத் தீர்க்கப்படாத வழக்குகளில் சிக்கியுள்ளவர்கள், சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் பிளவின் இரு பக்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னைய அரசாங்கங்களின் முன்னணித் தலைவர்களாக இருப்பதால், படிப்படியாகச் சூழ்ந்து வரும் இந்த சட்ட நடைமுறைகளுக்குப் பின்னால் கண்ணுக்குத் தெரிந்த மற்றும் தெரியாத மிகப்பெரிய எதிர்ப்புகள் இருப்பதை எளிதாக ஊகிக்க முடிகிறது.

தற்போது விசாரிக்கப்பட்டு வரும் இந்த வழக்குகள், அரசியல் முகாம்களைக் கடந்து, நாட்டின் மிக உயர்ந்த பதவிகளை வகித்த நபர்களை உள்ளடக்கியதாக உள்ளன. இதன் விளைவாக, பொறுப்புக் கூறலுக்கான எதிர்ப்பு பல தரப்பிலிருந்தும் எழுவதற்கு வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும், போரின் போது காணாமல் போன ஆயிரக்கணக்கான நபர்கள் தொடர்பான வழக்குகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளன.

அவர்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், தற்போது நடைபெற்று வருவது போன்ற தீவிரமான விசாரணைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், புதிதாக ஆட்சிக்கு வந்துள்ளவர்களினால் வழிநடத்தப்படும் தற்போதைய அரசாங்கம், தலைமுறை தலைமுறையாக அதிகாரத்தைச் செலுத்தி வந்த எதிர்க்கட்சியினரிடமிருந்து எழக்கூடிய எதிர்ப்பை அல்லது முட்டுக்கட்டைகளை எதிர்கொள்வதற்கு, தங்களின் அதிகாரத்தை அதிகபட்சமாகத் தக்க வைத்துக்கொள்ளவே விரும்பும் என்பதை ஊகிக்க முடிகிறது.

அதிகாரத்தை பரவலாக்குவதற்கோ அல்லது தங்களுக்குக் கிடைக்கக்கூடிய அரச அதிகாரத்தின் கருவிகளைக் குறைப்பதற்கோ இது பொருத்தமான தருணம் அல்ல என்று அரசாங்கம் கணக்கிடக்கூடும். அதற்குப் பதிலாக, தலையீடுகள் இன்றி விசாரணைகள், வழக்குத் தொடருதல்கள் மற்றும் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு அவசியம் என்று அது நம்பக்கூடும்.

அரசாங்கத்துக்கு எதிராக மக்களையும் பொதுக் கருத்தையும் திரட்டுவதற்கு எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை என்றே தோன்றுகின்றது. விலை உயர்வுகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்ப்பை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி இதற்கு ஒரு உதாரணமாகும்.

விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி பாதிக்கப்பட்டுள்ள போதிலும், இந்த முயற்சிகள் கணிசமான அளவு வேகத்தைப் பெறத் தவறின.

மற்றுமொரு முயற்சி, சட்டரீதியான வழக்குகள் முன்னோக்கி நகர்வதால் மே மாதத்தில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சிறைத்தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என்று ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க கணித்துக் கூறியபோது உருவானது. இருப்பினும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. இத்தகைய கருத்துக்கள் நீதித்துறை விளைவுகளில் செல்வாக்கு செலுத்தும் நோக்கத்தை உணர்த்துவதாக விமர்சகர்கள் குற்றம் சாட்டினர்.

எனினும், இந்த விமர்சனமும் பொதுமக்களிடையே பெரியளவில் எடுபடவில்லை. இதற்கான சாத்தியமான காரணம் என்னவெனில், பொதுமக்களின் நினைவாற்றல் இன்னும் பசுமையாக இருப்பதேயாகும். முன்னைய அரசாங்கங்களை தவறான பொருளாதார முகாமைத்துவம், ஊழல் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் இறுதியாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றுடன் மக்களில் பலர் இப்போதும் தொடர்புபடுத்திப் பார்க்கிறார்கள். ஒப்பிட்டளவில், தற்போதைய அரசாங்கம் பொதுமக்களின் நன்மதிப்பையும் நம்பகத்தன்மையையும் தொடர்ந்து பெற்று வருகின்றது.

சட்ட நடவடிக்கைகள் ஆதாரங்கள் மற்றும் முறையான செயல்முறைகளின் அடிப்படையில் அமைந்திருப்பதாகத் தோன்றும் வரை, சந்தேகத்தின் பலனை அரசாங்கத்துக்கு ஆதரவாக வழங்க பொதுமக்கள் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.



ஒரு சிறந்த எதிர்காலத்திற்காக தாமதமின்றி ஒரு நீதியானதும் ஜனநாயக அடிப்படையிலானதுமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையர்கள் அர்ப்பணிக்க வேண்டிய இரு தூண்களாக பொறுப்புக்கூறலும் அதிகாரப் பகிர்வும் விளங்குகின்றன. இப்போது தவறினால் அடுத்த வாய்ப்புக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலைஏற்படுத்தும்.

மத்தியமய அதிகாரத்தைக் குறைக்கும் வகையிலான அரசியல் சீர்திருத்தங்களை நோக்கிய அரசாங்கத்தின் நிதானமான - எச்சரிக்கையான அணுகுமுறையை இந்த பின்னணியில் தான் பார்க்க வேண்டும். அவசரகால விதிமுறைகளுக்கு பாராளுமன்றம் மாதாந்தம் அங்கீகாரம் வழங்குவதை, 'டித்வா" சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவுகளை தொடர்ந்து கையாள வேண்டிய தேவையின் காரணமாக அரசாங்கம் நியாயப்படுத்துகிறது.

இருப்பினும், தேர்தல் சீர்திருத்தங்களைக் காரணம் காட்டி மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் காட்டும் தயக்கம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதில் ஏற்பட்டுள்ள தோல்வி மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை ஆகியவற்றை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இவை அனைத்தும் அரசியல் ரீதியாக உணர்திறன் மிக்க ஒரு தருணத்தில் அதிகப்படியான கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்வதற்கான விருப்பத்தையே பிரதிபலிக்கின்றன.

இந்த அணுகுமுறையில் ஒரு தர்க்கம் உள்ளது. பெரிய சட்ட மற்றும் அரசியல் மோதல்களை எதிர்கொள்ளும் அரசாங்கங்கள் பெரும்பாலும் ஸ்திரத்தன்மையையும் கட்டுப்பாட்டையும் நாடுகின்றன. ஒவ்வொரு சர்வாதிகாரியும் இதையே செய்கிறார்கள். இருப்பினும், இதில் ஒரு குறைபாடும் உள்ளது.

அரசியல் போட்டிக்கான வாய்ப்புகள் முறையான வழிகளில் மறுக்கப்படும்போது, அது பெரும்பாலும் மோதல், முட்டுக்கட்டை மற்றும் துருவமயமாக்கல் ஆக்குவத்தின் மூலம் வெளிப்படுகிறது. இச்சமயத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னுரிமை அளித்தால் அதன் மூலம் தற்போது உருவாகி வரும் அரசியல் அழுத்தங்களைக் குறைய வாய்ப்பிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த தேர்தல்களை நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து வலியுறுத்தி வருகின்றன. இவற்றை நடத்துவது, மாகாண மட்டத்தில் ஒரு வகையான ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தையும் அரசியல் அதிகாரத்தை யும் பெறுவதற்கான வாய்ப்பை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கும். குறிப்பாக, இன மற்றும் மத சிறுபான்மை யினர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இது மிகவும் உண்மையான தாக இருக்கும்.

மாகாண சபை முறையானது இன மோதல்களுக்கு ஒரு ஆக்கபூர்வமான தீர்வாகவே உருவாக்கப்பட்டது என்பதை மறந்துவிட முடியாது. மாகாண மட்டத்திலான தேர்தல்கள், அரசியல் ஆதரவை நாடாமல், ஜனநாயகப் போட்டியின் மூலம் ஒரு புதிய தலைமுறை அரசியல் தலைவர்கள் உருவாவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

தற்போது சட்டத்தின் பரிசீலனைக்கு ஆளாகியிருப்பவர்களில் பெரும்பாலோர் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஆவர். புதிய தலைமுறையினர் இவர்களுக்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டிய அவசியம் குறைவாகவே இருக்கலாம்.

இருதரப்பு ஆதரவைப் பெறக்கூடிய மற்றொரு சீர்திருத்தம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அதன் அசல் நோக்கத்தைத் தாண்டிய சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படுவதால் மீண்டும் ஒருமுறை சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் முன்னாள் உளவுத்துறைத் தலைவர் சுரேஷ் சாலே தடுத்து வைக்கப்பட்டமை, யுத்தக் காலத்தைச் சேர்ந்த சில தமிழ் கைதிகள் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டமை மற்றும் பேச்சுரிமை தொடர்பான குற்றச்சாட்டுகளின் கீழ் நபர்கள் கைது செய்யப்பட்டமை ஆகிய அனைத்தும், விசாரணையின்றி நீண்டகாலம் தடுத்து வைப்பது மற்றும் மிதமிஞ்சிய நிறைவேற்று அதிகாரம் குறித்த கவலைகளை மீண்டும் ஏற்படுத்தியுள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது கடினமாக இருப்பதற்குக் காரணம், அது தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு தொடர்பான கவலைகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளமையாகும். வளர்ந்துவந்த பிரிவினைவாத மோதலை எதிர்கொள்வதற்காக 1979 ஆம் ஆண்டில் ஒரு தற்காலிக நடவடிக்கையாக அறிமுகப்படுத்தப்பட்ட இச்சட்டம், பல தசாப்த கால யுத்தத்திலும் நிலைத்திருந்து, மோதல் முடிவடைந்து நீண்ட காலத்திற்குப் பின்னரும் சட்டப்புத்தகங்களில் நீடித்து வருகின்றது.

அதே நேரத்தில், அசாதாரணமான அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதை வரலாறு காட்டுகிறது. விசாரணையின்றி தடுத்து வைப்பதற்கு அனுமதிக்கும் அல்லது பரந்த நிறைவேற்று அதிகாரத்தை வழங்கும் சட்டங்கள், அவற்றின் அசல் நோக்கத்துடன் மட்டும் அரிதாகவே மட்டுப்படுத்தப்படுகின்றன. வெவ்வேறு அரசியல் கட்சிகளின் அரசாங்கங்கள் இத்தகைய அதிகாரங்களை எதிர்ப்பாளர்களுக்கும் விமர்சகர்களுக்கும் எதிராகப் பயன்படுத்தியுள்ளன.

அவ்வாறு செய்வதற்கான தூண்டுதல் என்பது கட்டுப்பாடற்ற அதிகாரத்தைக் கொண்டிருப்பதிலேயே இயல்பாக அமைந்துள்ளது. எனவே, இதற்கான முன்னோக்கி செல்லும் வழிமுறை என்பது பொறுப்புக்கூறல் மற்றும் சீர்திருத்தத்தின் கலவையாக அமையலாம். பெரிய அளவிலான ஊழல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளில் சுயாதீனமான விசாரணைகள் மற்றும் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும்.


இவ்விடயத்தில் அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்துவது சட்டத்தின் ஆட்சியின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் என்பதோடு, எந்தவொரு தனிநபரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் அல்ல என்ற கொள்கையையும் உறுதிப்படுத்தும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்குப் பதிலாக, ஜனநாயக நெறிமுறைகள் மற்றும் மனித உரிமைத் தரங்களுக்கு இணங்குவதோடு, நியாயமான பாதுகாப்புக் கவலைகளையும் கையாளும் வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத் தொகுப்பைத் திருத்தும் புதிய சட்டத்தைக் கொண்டு வரலாம்.

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

# மாகாணசபைகளுக்கான தேர்தல்

# மக்களுக்கா? அரசியல்வாதிகளுக்கா?

பனங்காட்டான்



**வடக்கு கிழக்குக்காக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் புகுத்தப்பட்ட மாகாண சபை முறைமை இலங்கை அரசால் மட்டுமன்றி இந்தியாவாலும் கூட வேண்டப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது. ஆனால், மாகாணசபைத் தேர்தலை தமிழ்த் தேசிய கட்சிகள் முக்கியமாக தமிழரசுக் கட்சிநாளும் பொழுதும் வேண்டிவருகிறது. இதற்காக தாயகத் தமிழ் மக்களை இணைத்து வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தும் வலிமை இவர்களிடம் உள்ளதா? இதற்கு விடை காணப்படாதவரை மாகாணசபைத் தேர்தல் மக்களுக்கானதா அல்லது அரசியல்வாதிகளுக்கானதா என்ற கேள்வி தொடர்ந்தவாறே இருக்கும்.**

ஊழல் ஒழிப்பு என்பதை தாரக மந்திரமாக முன்னிறுத்தி தேர்தலை சந்தித்த தேசிய மக்கள் சக்தி இப்போது அதனை செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. ஏழு தசாப்தங்களாக ஊழலில் ஊறிப்போன குட்டித் தீவை எடுத்த எடுப்பில் அதிலிருந்து நீக்கிவிட முடியாது.

அநுரகுமர திஸ்ஸநாயக்க தலைமையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்ததும், முன்னைய ஆட்சிக் காலங்களில் ஊழலில் ஊறிப்போயிருந்தவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று எதிர்பார்த்தனர். அப்படி எதுவும் நடைபெறவில்லை. அதனையே தமது பலமாகக் காட்டி தம்மை ஊழலற்றவர்கள் என்று படங்காட்ட முனைந்தவர்கள் - வெளிநாட்டில் பதுக்கிய பணத்தை மீட்டுவிட்டீர்களா, துணிவிருந்தால் சொன்னதை செய்யுங்கள் என்று ஆட்சித் தரப்பைப் பார்த்து சவால் விட ஆரம்பித்தனர்.

இவ்வாறு சவால் விட்டவர்களில் முக்கியமானவர் மகிந்தவின் புதல்வரான நாமல் ராஜபக்ச. அநுரகுமர தரப்பு ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை எடுப்பதில் கரிசனை காட்ட முனைந்த போது ராஜபக்சக்கள் நிலைகுலைந்தனர். இவர்கள் அனைவருமே இன்று ஏதோ ஒரு ஊழல் சட்ட நடவடிக்கையை எதிர்கொண்டுள்ளனர்.

அரச புலனாய்வுச் சேவையின் முனனாள் தலைவரான சுரேஸ் சாலேயை 90 நாட்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்துவைக்க ஜனாதிபதி என்ற பதவி வழியாக அநுரகுமர உத்தரவிட்டதன் பின்னரே கிணறு வெட்ட பூதம் கிளம்பியதுபோல் முன்னாள் அரசியல்வாதிகள் பலர் திகிலடைந்தனர். கோதபாய, பசில் போன்ற மகிந்தவின் உடன்பிறப்புகள் மீது ஊழல் சட்டம் பாய ஆரம்பித்துள்ளது.

அதுதனது கடமையைச் செய்வதை பொறுக்கமுடியாத சிலர், அரசியல் எதிரிகளை ஓரங்கட்ட சட்டம் பயன்படுத்தப்படுகின்றது என்கின்றனர். சர்வாதிகாரத்தை நோக்கி அரசுநகர்கிறது என்ற கோசமும் எழுப்பப்படுகிறது. கைதான சிலர் பிணையில் விடப்பட்டுள்ளனர். கோதபாய உட்பட சிலருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமது பதவிக் காலத்தில் சட்டங்களை நேர்த்தியாக பயன்படுத்தியதாகக் கூறிவரும் சுரேஸ் சாலே தம்மை நிரபராதி எனக் காட்டுவதற்காக உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். மகாத்மாகாந்தியும், தியாகி திலீபனும் முன்மாதிரியா களடுத்துக் காட்டிய உண்ணாவிரதம் இப்போது எங்கே வந்துநிற்கிறது.

சுரேஸ் சாலேயின் உண்ணாவிரதம் தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நியாயமான ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார். 'நீங்கள் குற்றமற்றவர் என்றால் நீதிமன்றம் ஊடாக நிரூபித்துக் காட்டுங்கள். மாறாக உண்ணாவிரதப் போராட்டம் இருப்பதால் பயனில்லை' என்று இவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமக்குப் பின்னராக கோதபாய உட்பட பலர் கைதாகினால் அதுதம் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபித்து விடும் என்ற அச்சம் சுரேஸ் சாலேயிடம் ஏற்பட்டுள்ளது. ராஜபக்சக்களின் முன்னாள் சகபாடிகளான விமல் வீரவன்ச, உதயகம் மன்பில போன்றசிலர் இவ்விடயத்தில் சுரேஸ் சாலேயை உசுப்பேத்தி வருவதையும் அவதானிக்க முடிகிறது.

இந்தச் செய்திகள் அண்மைய நாட்களில் ஊடகங்களை பெருமளவில் ஆக்கிரமித்து வருவதால் தமிழர் தேச அரசியலும், இங்கு இடம்பெற்ற மனிதப் படுகொலைகள், புதைகுழி உடலங்களும் சர்வதேசப் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டு வருகின்றன.

அரியாலை சித்துப் பாத்திமயானம் என்று அழைக்கப்படும் செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு ஆரம்பமாகி 23 நாட்களை எய்திவிட்டது. இதுவரை 334 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. போர்க்காலம் என்று கூறப்படும் தமிழின அழிப்புக் காலத்தில் தாயகத்தில் காணாமலாக்கப்பட்ட, கொல்லப்பட்டவர்களின் உடலங்கள் இங்கு கொத்துக் கொத்தாக புதைக்கப்பட்டுள்ளது. சிறார்கள், குழந்தைகள், அவர்களின் பாற்போத்தல்கள், விளையாட்டுப் பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கிரிக்கெட் விளையாட்டில் ஸ்கோர் (ஓட்ட எண்ணிக்கை) அறிவிக்கப்படுவது போல இங்கு மீட்கப்படும் உடலங்களதும் என்புக் கூடுகளதும் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டு வருகிறது. முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன் ஒப்பிடுகையில் செம்மணியின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இதுபற்றிய செய்திகள் கூட அக்கறை காட்டப்படாதவையாக காணப்படுகின்றன. தினசரி இங்கு மீட்கப்பட்டுவரும் என்புக் கூடுகள் எம்மவர்களுடையது என்றஉணர்வு இன்னமும் எம்மவரிடம் ஏற்படவில்லையென்றே கூறவேண்டும் போல் இருக்கிறது.

இதே உணர்வுடன்தான் தமிழ்த் தேசிய அரசியல்வா[illegible] படுகின்றனர்[illegible] மறந்துவிட்டனர். அண்மையில் இந்தப் பக்கம் அவர்கள் சென்றதாகக்கூட கதையில்லை. தங்கள் உள்வீட்டுப் பிரச்சனையையே தீர்க்கமுடியாது ஊடகங்கள் ஊடாகஅறிக்கைவிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு செம்மணிபக்கம் போக நேரம் இல்லைப் போலும்.

எதிரியுடன் மோதவேண்டிய இவர்கள் அதனை மறந்து தமிழ்த் தேசியத்துக்குள் இருப்பவர்களுடன் இழுபறிப்படுவதையே காணமுடிகிறது. தாங்கள் தனித்துவம் பேணுவதாக கூறிக்கொள்ளும் தமிழரசுக் கட்சிதங்களின் உள்வீட்டு மோதலைத் தான் இவ்வாறு கூறுகிறதுபோலும்.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி என்றதும் முதலில் நினைவுக்கு வருவது தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகம். இந்தக் கட்டிடத்தில் நன்கு பிரபலமானவர்கள் அமரர் மாவை சேனாதிராஜா, நிர்வாகச் செயலாளராகவிருந்த சேவியர் குலநாயகம், செயற்குழு உறுப்பினரான பி. கனகசபாபதி ஆகியோர். தமிழரசுக் கட்சியை யேதங்கள் வாழ்நாளாக கருதி பணியாற்றியவர்கள் இவர்கள். இவர்களைப் பிடிக்காத உள்வீட்டுக்காரர்கள் சிலர் இவர்களை முதியோர் கிளப் உறுப்பினர்கள் என்று நையாண்டி பண்ணுவதுண்டு.

திரு. குலநாயகம் அவர்கள் கடந்த வாரம் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கை ஒன்று மிகவும் பிரபல்யமானது. கறையான் புற்றெடுக்க கொடிய நாகங்களும் விசயந்துக்களும் குடிகொண்டு சன்னதம் ஆடு[illegible]போன்று கட்சியை தள்ளி வி[illegible]தென இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அவர் கட்சியின் யாழ். மாவட்டகிளை தேர்தல் நடத்தப்பட்ட முறைமையை விரிவாகவிளக்கியுள்ளார். கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் பெயர்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. பதில் செயலாளர் வழமைபோன்று புரிந்துகொள்ள முடியாத பதில் ஒன்றை வெளியிட்டுள்ளார். ஆனால் பதில் தலைவர் எதுவுமே தெரியாதவர் போன்று அமைதிகாத்து வருகிறார்.

தமிழரசுக் கட்சியின் ஒரேயொரு யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட எம்.பியான சிவஞானம் சிறீதரன் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழரசின் பிரச்சனையை கட்சிக்குள்ளேயே தீர்ப்போம் எனத் தெரிவித்துவிட்டு, திரு. குலநாயகம் அவர்களை கட்சியின் தேசிய பட்டியல் எம்.பியாக நியமிக்கதாம் எடுத்த முயற்சி ஏற்கப்படாத உள்வீட்டு விவகாரத்தை அம்பலமாக்கியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியும், நீட்சியும் மாட்டுவால்போல் கீழ்நோக்கி வளர்ந்து செல்லும் நிலையிலும் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற குரலில் தமிழரசுக் கட்சி தொடர்ந்து வருகிறது. அப்படியொரு தேர்தல் இப்போது நடத்தப்பட்டால் வடக்கு கிழக்கில் எத்தனை ஆசனங்களை தமிழரசுக் கட்சி பெறுமென்பது அவர்களுக்கு மட்டுமல்ல மற்றைய கட்சிகளுக்கும் தெரியும்.

13ம் திருத்தம், மாகாணசபைத் தேர்தல் என்பவை தமிழர் பிரச்சனைக்கான அப்போதைய தீர்வாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் புகுத்தப்பட்டவை. ஆனால் இந்தத் தேர்தலை நடத்துவதில் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் போதிய அக்கறை காணப்படவில்லை. எனினும், தேர்தல் வேண்டுமென்று தமிழரசுக் கட்சியும் மற்றைய தமிழ்த் தேசிய அணிகளும் முனைப்பாக நிற்கின்றன.

மாகாணசபைத் தேர்தலை தாமதமின்றி நடத்தவேண்டுமென வலியுறுத்தும் மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தும் வலிமை தமிழரின் தலைமைக் கட்சி என்று கூறும் தமிழரசுக் கட்சிக்கு உள்ளதா? அப்படி இருக்குமாயின் அதற்காக மக்களை அணிதிரட்டி களத்தில் காட்டவேண்டும். இதனைச் செய்யாதவரை மாகாணசபைத் தேர்தல் மக்களுக்கானதா அல்லது அரசியல்வாதிகளுக்கானதா என்ற கேள்விபதில் காணமுடியாது தொடர்ந்தவாறே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியலில் பேச்சும் செயலும்



-யதீந்திரா

**அண்மையில்** தமிழர் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கனேசன், கனடாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். இதற்கு முன்னர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் அழைக்கப்பட்டிருந்தார். கனடிய தமிழ் புலம்பெயர் சமூகம், அவ்வப்போது சிலரை அழைப்பதும், அவர்கள் அங்கு அதிகம் பேசுவதெல்லாம், பல வருடங்களாக இடம்பெற்றுவரும் சங்கதிதான். அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தும் தீர்வுத் திட்டத்தை அனைத்து சிறுபான்மை சமூகங்களும் ஒன்றிணைந்து கூட்டாக முன்வைத்தால், அது வெற்றியடையக் கூடிய வாய்ப்பு அதிகம் என்றும், அதுவே தனது எதிர்பார்ப்பு என்றும், அதுதான் தனது முக்கியமான செய்தி என்றும் கணேசன் தெரிவித்திருக்கின்றாராம். பேசுவது அரசியல்வாதிகளின் தொழில் ஆனால், அவற்றை சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதுதான் சிந்திக்கும் தரப்பினரின் பணி.

இலங்கையின் தமிழ் மொழிச் சமூகங்கள் அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்படுவது நல்லதுதான். அப்போதும் கூட, அரசியல் தீர்வை அடைய முடியும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை, ஆனால் ஆகக் குறைந்தது கொழும்பின் மீது சில அழுத்தங்களை கொடுப்பதற்காவது அது பயன்படும்தான். எனவே அதனை நாம் ஆதரிக்கலாம் ஆனால் கேள்வி - ஏன் இன்றுவரையில் அவ்வாறானதொரு இணைவு சாத்தியப்படவிலலை?

யுத்தம் முடிந்து பதினேழு ஆண்டுகள் ஆகிவிட்டதே - இந்த பதினேழு ஆண்டுகளில், அந்த நல்ல விடயம் ஏன் நடக்கவில்லை? இதற்கு என்ன காரணம்? ஒன்றுபட்டு செயற்பட்டால் நல்லது என்பதைச் சொல்வது இலகுவான - அதனை எவர் வேண்டும் என்றாலும் சொல்லிவிட்டுச் செல்லலாம் - கடந்த பதினேழு வருடங்களாக இதனைத்தான் பலர், மேடைக்கு மேடை சத்தமிட்டனர். ஆனால் எதுவும் நடக்கவில்லையே - ஏன்?

விடுதலைப் புலிகள் இருக்கின்ற காலத்தில் கூட மலையக அரசியல் தலைவர்கள் வன்னிக்கு அழைக்கப்பட்டிருந்தனர். முஸ்லிம் தலைவர்கள் வன்னிக்கு அழைக்கப்பட்டனர். உடன்பாடும் எட்டப்பட்டது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை சந்தித்த தருணம் பற்றி அண்மையில் ஹக்கீம் நினைவுபடுத்தியிருந்தார். ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜயவீரவின் (உண்மையில் ருகுணு விஜயவீர) மகனைப் போன்று, பிரபாகரனின் மகனும் பாதுகாக்கப்பட் டிருக்க வேண்டும் என்றும் அண்மையில் கூறியிருந்தார். உண்மைதான் பிரபாகரனின் மீதான வெறுப்பை, ஒரு சிறுவன் மீது காண்பித்தது மிலேச்சத்தனமானது. ஆனால் அவ்வாறான மிலேச்சத்தனமான சம்பவங்கள் நடந்த காலத்தில், ஹக்கீம் ஏன் அமைதியாக இருந்தார்? அவ்வாறான மிலேச்சத்தனங்களை புரிந்தவர்களோடு, ஆட்சியில் பங்குகொள்ளும் போது, இந்த ஞானம் ஏன் வரவில்லை?

சில வருடங்களுக்கு முன்னர் டெலோ - தமிழீழ விடுதலை இயக்கம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, கடிதம் எழுதும் முயற்சியில் ஈடுபட்டது. யுத்தம் முடிந்த பின்னர் தமிழ் கட்சிகள், புதுடில்லியை நோக்கி நேரடியாக ஒரு அழைப்பை விடுத்த சந்தர்ப்பம் அதுதான். இந்தக் கட்டுரையாளர் அப்போது அந்த முயற்சியை மிகவும் உறுதியாக ஆதரித்திருந்தார். அன்றைய சூழலில், சம்பந்தன் உடல்ரீதியாக தளர்வடைந்திருந்தார். ஒரு வேளை சம்பந்தன் இயங்கு நிலையில் இருந்திருந்தால், டெலோவினால் அவ்வாறானதொரு முயற்சியை மேற்கொண்டிருக்கவும் முடியாது. அந்த முயற்சி கூட முறையாக அணுகப்படவில்லை என்னும் விமர்சனத்தையும் இந்தக் கட்டுரையாளர் அப்போதே முன்வைத்திருந்தார்.

அந்த முயற்சியின் போது, ஆரம்பத்தில் ஹக்கிமும், மனோ கணேசனும் ஆதரவாக இருந்தனர். ஆனால் ஒரு கட்டத்தில் விலகிவிட்டனர். ஏன் விலகினர்? ஆரம்பத்தில் அரசியலமைப்பில் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயம்தான் விவாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் சம்பந்தனின் தலையீட்டைத் தொடர்ந்து கடிதத்தின் உள்ளடக்கம் மாறியது. சமஸ்டி என்னும் சொல் உள்ளடக்கப்பட்டால்தான் தான் கையெழுத்திடுவேன் என்று அவர் அடம்பிடித்தார். சம்பந்தனை தவிர்த்து ஒரு கடிதத்தை அனுப்புவது பயனில்லை என்னனுமடிப்படையில், கட்சிகள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து ஹக்கீமும் மனோ கணேசனும் அந்த முயற்சியிலிருந்து வெளியேறினர்.

சமஸ்டியை ஏற்றுக் கொள்வதில் மனோ கணேசனுக்கும் ஹக்கீமுக்கும் என்ன பிரச்சினை? சமஸ்டி என்பது நல்ல விடயம்தானே! இங்குதான் மனோ கணேசன், ஹக்கீம் போன்றவர்களின் வீரவேச அரசியல்-ஆமை திடிரென்று தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொள்ளும். அதாவது, ஹக்கீமும், மனோகணேசனும் தென்னிலங்கையிலுள்ள ஒரு கட்சியுடன் இணைந்து அரசியல் செய்யும் நிலைப்பாடுடையவர்கள். சில வருடங்களாகத்தான் அவர்கள் அமைச்சுக்கள் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

இந்த நிலையில் ஈழத் தமிழ் தலைமைகளுடன் முற்றிலுமாக நின்றால் தென்னிலங்கையுடன் இணைந்த அதிகார அரசியலில் பங்கு கொள்ள முடியாமல் போய்விடும். அதற்கு இடையூறு ஏற்படும். இந்த அடிப்படையில்தான் சமஸ்டி அரசியலுடன் அவர்களால் ஒத்துப் போக முடியவில்லை. இது இப்போது மட்டுமல்ல. தமிழர் விடுலைக் கூட்டணியின் உருவாக்கத்தின் போதும் நடந்தது. ஆரம்பத்தில், கூட்டணியுடன் உடன்பட்டிருந்த சௌமியமூர்த்தி தொண்டமான் - பின்னர், தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த போது, அதிலிருந்து வெளியேறினார். ஏனெனில் அவ்வாறானதொரு அரசியலுடன் ஒத்துப் போனால், தன்னுடைய சமூகம் சார்ந்து, தென்னிலங்கையோடு பணியாற்ற முடியாதென்று எண்ணினார். அவர் அவ்வாறு எண்ணியதில் தவறில்லை. ஒவ்வொருவரும் அவர்களுக்கு வாக்களிக்கும் மக்கள் பற்றித்தானே சிந்திக்க வேண்டும். இந்த வரலாற்றிலிருந்துதான் விடயங்களை நோக்க வேண்டும்.



> இலங்கையின் தமிழ் மொழிச் சமூகங்கள் அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்படுவது நல்லதுதான். அப்போதும் கூட, அரசியல் தீர்வை அடைய முடியும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை, ஆனால் ஆகக் குறைந்தது கொழும்பின் மீது சில அழுத்தங்களை கொடுப்பதற்காவது அது பயன்படும்தான். எனவே அதனை நாம் ஆதரிக்கலாம்

இங்கு பிரச்சினை அனைத்து சிறுபான்மை சமூகங்களும் அதிகாரப்பகிர்விற்காக ஒன்றுபட்டுச் செயற்படுவது பற்றியது அல்ல - மாறாக, எந்த அரசியல் தீர்வுக்காக செயற்படுவது என்பதில்தான் பிரச்சினையுண்டு. தற்போதுள்ள சூழலில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும், அரசியலமைப்பில் உள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதில் மட்டும்தான் அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திக்க முடியும், ஆனால் அந்த விடயத்தில் கூட ஒன்றுபட்டுச் செயற்படுவதாகத் தெரியவில்லை.

அடுத்த விடயம் - இவ்வாறு பேசுபவர்களின் அரசியல் ஒழுக்கம் பற்றியது. அதிகார அரசியலில் ஒழுக்கம் பற்றி விவாதிப்பது பொருத்தமில்லைதான் ஆனால் குறைந்தளவாவது ஒரு ஒழுக்க நிலைக்குள் வரக் கூடியவர்களால்தானே மற்றவர்களுடன் இணைந்து செயற்பட முடியும். இப்போதெல்லாம் எதிரணியிலுள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள், தேசிய மக்கள் சக்தி பற்றி அதிகம் பேசுகின்றனர். எவர் ஆட்சியில் இருக்கின்றார்களோ அவர்கள் தொடர்பில் பேசுவதில் ஆச்சரியமில்லை. அது ஒரு அரசியல் இயல்பும் கூட. ஆனால் சிந்திக்கும் தரப்பினர் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி வேறு. அதாவது, இவர்கள் ஒரு ஆட்சியை சார்ந்திருந்த போது அப்போது எவ்வாறான முன்னேற்றங்கள் இடம்பெற்றன? ஏன் இடம்பெறவில்லை - அப்போது எவ்வாறான தடைகள் இருந்தன? அந்தத் தடைகளை அகற்றுவதற்காக இவர்கள் செய்தது என்ன?

யாரிந்த ஹக்கீம்? 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, அன்றைய சூழலில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கே பிரதானமானதாகும். முஸ்லிம்களின் பங்கும் இருந்ததுதான், என்றாலும் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில்லாதுவிட்டால், அந்த ஆட்சி மாற்றம் சாத்தியப்பட்டிருக்காது. எவருடைய ஆதரவு இல்லாமல் ஒரு விடயம் சாத்தியமில்லையோ, அடிப்படையில் அவர்களே தீர்மானிக்கும் தரப்பினராவர். அந்த அடிப்படையில் தமிழ் மக்களின் வாக்குகளே அன்றைய சூழலில் மைத்திரியின் வெற்றியில் தீர்மானகரமான வாக்குகளாகும். அந்த ஆட்சி மாற்றத்தால், தமிழ் மக்கள் அரசியல்ரீதியில் எவ்வாறான நன்மைகளை பெற முடிந்து என்றால், எதுவுமில்லை. ஆனால் மறுபுறமாக, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய முஸ்லிம் கட்சிகள் ஆட்சி மாற்றத்தை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டன. அமைச்சரவையில் அதிகாரமுள்ள இடங்களை எடுத்துக் கொண்டனர். 2010இல் ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஹக்கீம், சில மாதங்களிலேயே, மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து, நீதி அமைச்சரானார். மகிந்தவின் அரசியல் மாளிகையில் மயக்கத்தில் புரண்டு கொண்டிருந்தவர், பொது பல சேனா என்னும் அமைப்பால் சுயநினைவு பெற்றார்.

மகிந்தவின் அரசாங்கத்தில் நீதி அமைச்சராக இருந்த ஒருவர், தேசிய மக்கள் சக்தி தொடர்பில் விமர்சிக்க முடியுமா?.

மனோ கணேசன் ஈழத் தமிழர்கள் தொடர்பில் தொடர்ந்தும் பேசிவருகின்ற ஒருவர்தான். ஆனால் அவரது அரசியலுக்கும் ஒரு எல்லையுண்டு. ஏனெனில் அவரும் தென்னிலங்கையின், ஒரு பிரதான கட்சியுடன் இணைந்து அரசியலை முன்னெடுப்பவர். அவர் வெளிப்படையாக பேசுபவராக இருந்த போதும் கூட, வெளிப்படையாகவே சிங்கள - பௌத்த நிலைப்பாடுகளை ஆதரித்துவரும் சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகித்துவருகின்றார். 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மைத்திரிபாலவின் ஆட்சியில் தேசிய உரையாடலுக்கான அமைச்சராக இருந்தார். உண்மையில் ஒரு தமிழரின் மூலம் தேசிய உரையாடலை முன்னெடுக்க முடியாது - ஆனால் அந்த அமைச்சில் அங்கம் பெற்றதன் ஊடாக எதனையும் செய்ய, செய்ய முடியாத அமைச்சராக வலம் வந்தார்.

எனவே இவ்வாறானவர்களின் பேச்சுக்கள் வெறும் பேச்சுக்கள் மட்டும்தான். புலம்பெயர் சூழலிலுள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களிடம் நிதியுண்டு. ஒவ்வொருவரும் தங்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு சிலரை அழைத்து மகிழ்கின்றனர். அது ஒரு போட்டியாகவும் - அதே வேளை செருக்காகவும் மாறிவிட்டது. யுத்தம் முடிந்த காலத்திலிருந்து இதுதான் இடம்பெறுகின்றது. ஆனால், பேச்சு பல்லக்கு தம்பி பொடி நடை என்பதற்கு அப்பால் எதுவும் நடக்கவில்லை. உண்மை - அப்படியொன்றும் நடக்காது, நடந்துவிடவும் முடியாது என்பதுதான் இன்றைய அரசியல் யதார்த்தம். ஆகக் குறைந்தது மாகாண சபைத் தேர்தல் விடயத்தில் கூட, அனைத்து தமிழ் மொழிச் சமூகங்களும் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான சூழல் கனியவில்லை. அது தானாகக் கனியாது என்பது எந்தளவு உண்மையோ, அந்தளவிற்கு காய் எங்கு கனியுமோ, அங்குதான் அதற்கான முயற்சிகள் இடம்பெற வேண்டும். மேற்குலக நகரங்களில் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாட்டும் நானே பாவமும் நானே பிடித்ததும் நானே பிணையில் விட்டதும் நானே



நிலாந்தன்

**எந்த அரசியலை சங்கீத்சன் மகிமைப்படுத்துவதாகக் கூறிக் கைது செய்யப்பட்டாரோ, அந்த அரசியலை அரசாங்கம் தன்னை அறியாமலேயே பிரபல்யப்படுத்தி, மகிமைப்படுத்தியிருக்கிறது. இது மறைந்த ஈழக்கவிஞர் மு. பொன்னம்பலம் தனது "முன்னிரவின் மோகனம்" என்ற கவிதையில் கூறுவதுபோல "அடக்கு முறைதான் விடுதலையைப் பிரசவிக்கும் மருத்துவிச்சி" அது "அதிகாரம் புரியாதசமன்பாடு" என்பதை நிரூபித்திருக்கிறதா?**



சங்கீத்சன் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். அவர் விடுவிக்கப் பட்டபின், நீதிமன்றவளாகத்தில் இருந்து அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அணியோடுதான் வெளியே வருகிறார். அவர்களுடைய வாகனத்தில் தான் ஏறிச்செல்கிறார். இளங்குமரன் நியமித்த சட்டத்தரணிகள தான் அவரைப் பிணையிலும் எடுத்திருக்கிறார்கள்.

ஆனால் சுமந்திரன் அணி அதற்கு உரிமை கோருகிறது. சிறீதரன் அணியும் உரிமைகோருகிறது. ஜனாதிபதியோடு சிறீதரன் தொலைபேசியில் உரையாடி, "சட்டத்துக்குள் சிக்கி சின்னாபின்னப்படாமல் புத்திசாதுரியமான இணக்கமுறைகள்" மூலம் அவர் பிணையில் விடுவிக்கப் பட்டதாக அந்த அணி கூறுகிறது.

ராப் இசை என்பதே எதிர்ப்புத்தான். ராப் மரபு என்பது மேற்கத்திய பண்பாட்டில் மரபுகளுக்கும் வளமைகளுக்கும் எதிராகவே மேற்கிளம்பியது. ஒடுக்கப் பட்டவர்களின் எதிர்ப்பாக, குரலற்றவர்களின் குரலாக, தடைசெய்யப்பட்டவர்களின் கோபமாக.. அது மேற்கிளம்பியது. சங்கீத்சனின் கலையிலும் அது இருந்தது.

அதனால்தான் அண்மையில், வவுனியாவில் நடந்த வாகீசனின் இசை நிகழ்ச்சியில் சங்கீத்சன் பாடியபோது அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் அந்தபாடலின் அரசியலைக் கண்டுபயந்து அவர் பாடுவதை இடையில் நிறுத்தியதாகக் கூறுகிறார்கள். அதனால்தான் அவரை பரந்தனில் உள்ள அரசபுலனாய்வுத் துறவினர் அவ்வாறான வரிகளை இசைக்க வேண்டாம் என்று ஏற்கனவே எச்சரித்திருக்கிறார்கள். அதுபோலவே உரும்பிராயில் ஒருகோவில் திருவிழாவில் தாயகப் பாடல்களைப் பாடியசாந்தனின் மகனையும் போலீசார் தடுத்தார்கள்.

அண்மைக் காலங்களாக தாயகப் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்ற போர்க்காலப் பாடல்களில் தெரிவு செய்யப்பட்ட பாடல்களை தாயகத்தில் ஆங்காங்கே கோவில் நிகழ்ச்சிகளிலும் இசை நிகழ்ச்சிகளிலும் உள்ளூர்ப் பாடகர்கள் பாடிவருகிறார்கள்.

மாவீரர் நாட்களின் போதும் திலீபனின் நினைவு நாட்களின் போதும் அது போன்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களின் போதும் போர்ப் பாடல்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பாடல்கள் இசைக்கப்படுவதுண்டு. தடைசெய்யப்பட்ட ஓர்அமைப்பை நினைவுபடுத்தும் விடயங்களைப் பயன் படுத்தக் கூடாது என்று போலீசார் தடை விதிக்கும்போது சில சமயம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தாயகப் பாடல்கள் அவ்வாறான நினைவு நாட்களில் இசைக்கப்படுவதுண்டு.

கோவில் விழாக்களிலும் இசைநிகழ்ச்சிகளிலும் அவ்வாறு பாடகர்கள் இயல்பாக அப்பாடல்களை பாடுவதுவேறு. அதேபாடல்களை அல்லது அதைப் போன்ற பாடல்களை தேர்தல் தேவைகளுக்காகப் பாடுவதுவேறு. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் - அவர்கள் இப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள்-அப்படிப்பட்ட பாடல்களை உற்பத்தி செய்து தமது பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தினார்கள். அதனை மனோகணேசன் அண்மையில் சமூக ஊடகவலைத் தளங்களில் சுட்டிக்காட்டியிருந்தார்.

தேசிய மக்கள் சக்தி மட்டுமல்ல, மைத்திரிபாலசிறிசேனவின் வேட்பாளராக களம் இறங்கிய அங்கஜன் ராமநாதன், கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முதல் நாடாளுமன்ற தேர்தலில் தாயகப் பாடல்களை தனது பிரச்சார உத்தியாகப் பயன் படுத்தினார் என்பது அவதானிக்கப்பட்டது. அந்தத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் அதிகளவு வாக்குகளையும் அவர் வென்றார்.

இவ்வாறு தென்னிலங்கைமையக் கட்சிகள் தமது தேர்தல் தேவைகளுக்காக, பிரச்சார உத்தியாக தாயகப் பாடல்களை அல்லது அது போன்ற பாடல்களைப் பாடும் ஓர் அரசியல் பின்னணியில், கோவில் நிகழ்ச்சிகளிலும் இசைமேடைகளிலும் இளம் பாடகர்களும் அப்பாடல்களைத் துணிந்து பாடலானார்கள். குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தியாகிகளை நினைவு கூரும் நாட்களில் தெரிந்தெடுக்கப்பட்ட தாயகப் பாடல்கள் ஆங்காங்கே ஒலிக்கவிடப்படுவதுண்டு.

கடந்த மகளிர் தினத்தின்போது, வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த ஒரு நிகழ்விலும் மூத்ததாயகப் பாடகியான பார்வதி சிவபாதம் தான் முன்பு பாடியதாயகப் பாடல்களில் சிலவற்றைப் பாடினார். அதன்பின் யாழ்ப்பாணம் டில்க்கோ ஹோட்டேலில் நடந்த போராளிகள் நலன்புரிஅமைப்பின் நிகழ்விலும் அவர் பாடினார். அவரைப் போன்று முன்பு தாயகப் பாடல்களைப் பாடியவேறு சில பாடகர்களும் அந்த மேடையில் பாடினார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் அவ்வாறு வெளிப்படையாகத் தாயகப் பாடல்கள் பாடப்படும் ஒரு நிலைமை அதிகரித்தது. குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் தமக்கு ஆபத்துக் குறைவு என்று ஒருதொகுதி பாடகர்கள் கருதியதால் இது நிகழ்ந்ததா? அல்லது கடந்த 17 ஆண்டுகளிலும் படிப்படியாக பயம் நீங்கியதன் விளைவாக ஏற்பட்டதா?

எதுவாயினும்,இவ்வாறு தாயகப் பாடல்கள் பகிரங்கமாகவும் அதிகரித்த அளவிலும் பாடப்படும் ஒரு வளர்ச்சியைக் கண்டுஅரசு புலனாய்வுத்துறை உஷாரடைந்து இருக்கலாம். இந்தப் போக்கை இப்படியே விட்டால் ஒரு கட்டத்தில் தடைசெய்யப்பட்ட எல்லாப் பாடல்களும் மேடைக்கு வந்துவிடும் என்று அரசாங்கம் உஷாரடைந்திருக்கலாம். அதன் விளைவாகவே சங்கீத்சன் எச்சரிக்கப்பட்டிருக்கலாம். அதன் விளைவாகவே உரும்பிராயில் சாந்தனின் மகன் பாடியபாடல் தடுக்கப்பட்டிருக்கலாம். அதன் விளைவாகவே சங்கீர்த்சன் கைதுசெய்யப்பட்டிருக்கலாம்.

மேலும்,தென்னிலங்கையில் சுரேஷ் சலே கைதுசெய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில், அவரைச் சுற்றிக் கட்டியெழுப் பப்படும் இனவாத அனுதாப அலையைத் தணிப்பதற்கு அரசாங்கத்திற்கு சங்கீத்சன் போன்றவர்களைக் கைது செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கலாம்.

எதுவாயினும், கலை நேரடியாக எதிர்ப்பின் வடிவமாக மேலெழுந்தால் அது நடக்கும். அதைத் தடை செய்வார்கள். பாடியவரைக் கைது செய்வார்கள். உலகம் முழுவதும் இது நடந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது தமிழ்த் தேசியத் துயரம் என்னவென்றால், எதிர்ப்பின் வரிகளை இசைத்தவரை மன்னிக்குமாறு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கேட்கிறார். அவரைக் கைதுசெய்தது அரசாங்கத்தின் போலீஸ். ஆவரை விடுவித்தது அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர். போதாக்குறைக்கு சங்கீத்சனும் கூறுகிறார் "அனுரவுக்குநன்றி" என்று. நாட்டில் என்ன நடக்கிறது ?

சங்கீத்சன் வெளியில் வரும்வரை ஒரு விடயத்தை எழுதவேண்டாம் என்று இருந்தேன். இனி எழுதலாம். முதலாவதாக ஓர் இசைவடிவமாக அவருடைய பாடல்கள் பெரிய அளவு வெற்றிபெறவில்லை. இரண்டாவதாக அவருடைய கவிதாமொழியும் கவர்ச்சியாக இல்லை. தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பை துணிந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ போற்றுகிறார் என்ற ஒரு கவர்ச்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வாரம் ஒரு சிந்தனை 3

## மலடிகளின் பெருக்கம்

பெட்டகம் பெடை பெண் பெதும்பை
பெந்தை பெய் பெயர் பெயல் பெரிய பெருகு
பெ... என்ற எழுத்தில் தொடங்கும் தமிழ்ச் சொற்கள்.
அளவைக் கூட்டுதல். எண்ணிக்கையைக் கூட்டுதல். பெ... என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களின் பொருள்.
பெண் என்றால் பெருக்குபவள்.
இனத்தைப் பெருக்குபவள்.
இயற்கையின் படைப்பு.
பெண்ணின் தலைமைக் கடன் மக்கட் பேறு.
பொன்முடியார் தமிழில் சொல்கிறார்.
2000 ஆண்டுகளுக்கு முன்பு சொல்கிறார்.
புறநானூறு 312ஆவது பாடலில் சொல்கிறார்.
நான் பிறந்ததே இனப்பெருக்கத்துக்காக
என் தலைமைக் கடன் இனப்பெருக்கம்.
"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே.."
மக்களைப் பெற்றவளே மகாராணி.
வள்ளுவர் சொல்கிறார் "..நன்கலம் நன் மக்கட் பேறு;".
மகளிர் பாடசாலைகளில்
மகளிர் கல்லூரிகளில்
சொல்லிக் கொடுத்துப் புகட்ட வேண்டிய
மாணவிகளின் மனத்தில் நிறுத்த வேண்டிய
முதல் பாடம்
பெண்ணின் முதற்கடன் மக்கட் பேறு.
இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு மகவு.
ஒரு பெண்ணின் வாழ்நாளில் ஆகக் குறைந்தது 20 மகப்பேறுகள்.
40 ஆண்டு காலம்.
27 மகப் பேறுகள்.
69 குழந்தைகள்.
பெற்றவர் உருசியப் பெண்.
"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே..." என 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து காட்டியவர்.
உலகத் தாய்மார்களுக்கு அவரின் சாதனை சவால்.
ஈழத் தமிழ்ப் பெண்களுக்கும் அவரின் சாதனை சவாலே.
வவுனியா நகரம். பொதுவாழ்வில் புகழ்பெற்ற முகமதியர். '..தமிழ்ப் பெண்கள் நால்வரை மணம் முடித்தேன். 20 குழந்தைகளைப் பெற்றேன்...'
பெருமையோடு சொல்கிறார். தமிழரான ஆண்களுக்கு அவருடைய கூற்றே சவால்.
எனினும் 2023இல் உலக மகப்பேற்று அளவு.
ஒரு பெண் வாழ்நாளில் சராசரி 2.3 குழந்தைகளுக்குத் தாயாகிறாள்.
20 குழந்தைகளுக்கு தாயாகத் கூடியவள்.
2.3 குழந்தைகளையே பெற்றெடுக்கிறாள்.
இலங்கைத் தாய்மார்
2016இல் தம் வாழ்நாளில் 2.16 மக்களைப் பெற்றெடுத்தனர்.
2025இல் தம் வாழ்நாளில் 1.3 குழந்தைகளையே பெற்றெடுத்தனர்.
மகளிர் பாடசாலைகள் பெண்களை மதிப்பெண் பெருக்கத்துக்கே தயாரிக்கின்றன.
மக்கட் பேறுப் பெருக்கத்துக்கு தயாராக்குவதில்லை.
இயற்கைக்கு எதிராகப் பெண் கல்வி.
இயற்கைக்கு எதிராகப் பெண்கள் வேலை வாய்ப்பு.
இயற்கைக்கு எதிராகக் கருத்தடை உத்திகள்.
இயற்கைக்கு எதிராக இலங்கைப் பெண்கள் உருவாகி வருகின்றனர்.
தாயாகும் வேகத்தை வெறுக்கின்றனர். திருமணத்தை வெறுக்கின்றனர்.
ஆண்களை அருவருப்போடு பார்க்கின்றனர்.
ஈழத் தமிழர் இடையே திருமண எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது.
ஈழத் தமிழரை அழிக்க எதிரிகள் வர வேண்டாம்.
ஈழத் தமிழ்ப் பெண்களே போதும்.
திருமணத்தைக் கையாளும் உத்திகளை மகளிர் பாடசாலைகள் சொல்லிக் கொடுப்பதில்லை. ஆண்களைக் கையாளும் அளவை முறைகளை மகளிர் பாடசாலைகள் சொல்லிக் கொடுப்பதில்லை. தாய்மைப் பேற்றைப் பெருமையாக்க மகளிர் பாடசாலைகள் சொல்லிக் கொடுப்பதில்லை.
பொருளைப் பெருக்கலாம்
வசதிகளைப் பெருக்கலாம்
வாழ்வியல் பண்புகளைப் பெருக்கலாம்
புகழைப் பெருக்கலாம்
நுகர்ச்சியைப் பெருக்கலாம்
இவை பேறுகள்
பெறற்கரிய பேறுகள் அல்ல.
மக்கட் பேறே பெறற்கரிய பேறு என்கிறார் திருவள்ளுவர்.
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. (குறள் 61)


மறவன்புலவு க. சச்சிதானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# என் இனிய தமிழ் மக்களே...!

ஜி.அசோக்

"இயக்குநர் இமயம்" என்ற பெயரைத் தாங்கி நின்ற பாரதிராஜா, தமிழ்த் திரையுலகின் மகத்தான கலைஞர். தனித்துவமிக்க ஒரு திரை ஆளுமை. அனைத்துக்கும் மேலாக, அன்றும் இன்றும் திரைத் துறைக்குள் காலடி எடுத்து வைக்க நினைப்பவர்களுக்கான முன்னோடி- இப்படிப் பலவிதமாகப் பல பிரபலங்கள் பேசி நாம் கேட்டிருக்கிறோம். அவரது ஒவ்வொரு திரைப்படத்திலும் ஆரம்பமாக ஒலிக்கும் "என் இனிய தமிழ் மக்களே.." என்ற அவரது குரல் காந்தமாக இன்றளவும் ரசிகர்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறது.



### தேனியிலிருந்து சென்னைக்கு:

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் அல்லிநகரத் தில் பிறந்து வளர்ந்த பாரதிராஜா, சிறு வயது முதலே படைப்பாற்றலில் கவனத்தைக் குவித்தவர். அருகி லுள்ள கிராமங்களில் மேடை நாடகங்கள் நடத்திய அனுபவம் உடையவர். இளையராஜா, கங்கை அமரன், பாஸ்கர் ஆகியோருடன் இணைந்து பயணித்தவர். அப்படிப் பட்டவர் இளமைப் பருவத்தில் தான் பார்த்து வந்த சுகாதார ஆய்வாளர் பணியைத் துறந்த பிறகே, சினிமா வாய்ப்பு தேடத் தொடங்கினார்.

சென்னையிலும் பெட்ரோல் விற்பனை நிலையத்தில் வேலை பார்ப்பது முதல் நாடகங்களில் நடிப்பது வரை பல பணிகளை மேற்கொண்டார். கன்னட இயக்குநர் புட்டண்ண கனகல் தொடங்கி பி.புல்லையா, கிருஷ்ணன் நாயர், அவிநாசி மணி, ஏ.ஜகந்நாதன் போன்ற இயக்குநர்களிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

### கிராமங்களைக் காட்டிய கேமரா:

தமிழ்த் திரையுலகில் அசல் கிராமங்களை சில திரைப் படங்கள் காட்டியிருக்கின்றன. பல்வேறுபட்ட மக்களின் பழக்க வழக்கங்களையும் கலாசாரத்தையும், பேச்சு வழக்கையும் பிரதிபலித்திருக்கின்றன. ஆனால், முழுமையாக ஒரு கிராமத்துக்குள் இறங்கி நடந்து பல்வேறு மக்களின் வாழ்வைக் கடந்து வந்த அனுபவத்தை ரசிகர்களுக்குத் தந்தன பாரதிராஜாவின் படைப்புகள். முதல் படமான "16 வயதினிலே" மூலமாக, அதுவே தனது பலம் என்று உணர்த்தினார். கிழக்கே போகும் ரயில், மண் வாசனை, முதல் மரியாதை, கடலோரக் கவிதைகள், கிழக்குச் சீமையிலே என்று அதற்குப் பல உதாரணங்களையும் தொடர்ந்து தந்தார்.

முதலிரண்டு படங்களுக்குப் பிறகு, இவருக்குக் கிராமத்துப் படங்கள்தான் எடுக்கத் தெரியும் என்று பேச்சு எழுந்தது. அந்த வாதத்தை உடைத்து, தான் பார்த்த உலக சினிமாக்களின் பாதிப்பில் ஒரு த்ரில்லர் படத்தை தந்து ரசிகர்களை வியக்க வைத்தார் பாரதிராஜா. கமல்ஹாசன், சிறிதேவியை அழகான திரை ஜோடியாக உருமாற்றிய "சிகப்பு ரோஜாக்கள்" படம்தான் அது. அதேபோல "டிக் டிக் டிக்" படத்தில் செய்த மாயாஜாலம், மசாலா பட காட்சியாக்கத்தில் அவரை ஒரு 'ட்ரெண்ட்செட்டர்'ஆக்கியது.

சத்யராஜ் நடிப்பில் வேதம் புதிது படத்தை இயக்கி ஜாதிய சிந்தனைக்கு எதிரான புரட்சியை ஏற்படுத்தினார்.

அதேபோல பீம்சிங், சிறிதர், பாலசந்தர் போன்ற தமிழ் பட இயக்குநர்களின் வரிசையில் தனது படங்களைத் தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட வேறு மொழிகளில் இயக்கும் சவாலையும் பாரதிராஜா திறம்படச் சமாளித்தார். 16 வயதினிலே, கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், அலைகள் ஓய்வதில்லை போன்றவற்றின் "ரீமேக்" ஆக அவை இருந்தன. நேரடியாக யுவதாரம் பிலிசிந்தி, ஜமதக்னி என்று இரண்டு தெலுங்கு படங்களையும் இயக்கியிருக்கிறார்.

ரஜினிகாந்த், விஜயகாந்தை தன் திரைப்பட நாயகர்களாக்கி, அவர்களது பாணியிலேயே கொடி பறக்குது, தமிழ்ச்செல்வன் படங்கள் தந்திருக்கிறார். அவற்றால் கடுமையான விமர்சனங்களுக்கும் ஆளாகியிருக்கிறார். "அந்தி மந்தாரை" படைத்து வியப்பை ஏற்படுத்தினார். தன் மனதுக்குப் பிடித்த படமாக "காதல் ஓவியம்" தந்த பிறகு, அதன் தோல்வியால் தமிழ் மக்களைச் சபித்திருக்கிறார். இதுபோல எத்தனை சொன்னாலும், பாரதிராஜாவின் படைப்பு என்ற அடையாளம் ரசிகர்களிடம் ஏற்படுத்தும் தாக்கத்துக்கு ஈடு இணை கிடையாது.

### கேமரா முன்னால்..:

பாரதிராஜா தன் மகன் மனோஜை நாயகனாக்கி "தாஜ் மஹால்" தந்தார். அது கலவையான காட்சியனுபவத்தைத் தரக் கூடியது. அந்தப் படத்துக்குப் பிறகு, தனது பலங்களை எல்லாம் விட்டுவிட்டு ஒரு புதிய இயக்குநர் போல பல்வேறு பரீட்சார்த்த முயற்சிகளில் இறங்கினார். கண்களால் கைது செய், பொம்மலாட்டம் என்று வேறு திசையில் பயணித்தார். அதே நேரத்தில், மணிரத்னத்தின் "ஆயுத எழுத்து" மூல மாக கேமரா முன்பும் தலைகாட்டினார். அதற்கு முன்பும் கூட சில படங்களில் தோன்றியிருக்கிறார் என்றபோதும், அவற்றில் ஒரு பாத்திரமாக உலா வந்ததில்லை. இந்தப் படத்தில் அதைச் செய்தார்.

தனது நடிப்பின் வழியே நிறையவே விமர்சனங்களை எதிர்கொண்டார். "கல்லுக்குள் ஈரம்" காலத்திலும் அதுவே நிகழ்ந்தது என்றபோதும், இம்முறை தகுந்த வாய்ப்புகள் வரும்போது அந்த எண்ணங்களை உடைத்தெறிய வேண்டுமென்று கங்கணம் கொண்டார். "பாண்டியநாடு", "குரங்கு பொம்மை" என்று தொடங்கி "திருவின் குரல்" படத்திற்குப் பிறகும் அதைச் சாதித்திருக்கிறார். அந்த வகையில் "திருச்சிற்றம்பலம்" படம் உருவாக்கிய தாக்கத்தில் "வாத்தி"யில் ஒரேயொரு காட்சியில் தோன்றியதுகூட அவரது தனித்துவம் என்றே சொல்ல வேண்டும்.

ஓர் இயக்குநரின் உதவி இயக்குநர்களில் ஒரிருவர் இயக்குநர் அந்தஸ்து பெற்றாலே பெரிய விஷயம் என்றிருந்த காலகட்டத்தில் கே. பாக்கியராஜ், மணிவண்ணன், மனோபாலா, ரங்கராஜ், மனோஜ்குமார், சித்ரா லட்சுமணன், பொன்வண்ணன் என்று பெரும்படையே அவரிடம் இருந்து வெளிவந்து தமிழ்த் திரையுலக வெற்றிகளைத் தங்களுடையதாக்கியது. கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் என்ற வார்த்தைகளின் கீழே ஒருவரது பெயர் வருவதே கௌரவம் என்றிருந்த காலகட்டத்திலும், அவர் பல கதாசிரியர்களிடம் கதை வாங்கியே அவற்றைத் தனது திரைப்படங்களாக மாற்றிக் கொண்டிருந்தார்.

திரையுலக இலக்கணங்களில் இருந்து விலகி நின்று சுதாகர், ராதிகா தொடங்கி பல நடிகர் நடிகைகளை அறிமுகம் செய்த பெருமையும் இவருக்கு உண்டு. படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு, நாயகத் தேடலில் ஈடுபட்டபோதே பாரதிராஜாவின் கண்களில் பாண்டியன் தென்பட்டார் என்பதும், அவரை "மண்வாசனை'யில் நாயகன் ஆக்கினார் என்பதும் வரலாறு.

இது போன்று பல விஷயங்கள் அவரை ஒரு "தனித்துவக் கலைஞராக" முன்னிறுத்தும். பாரதிராஜாவின் படைப்புத் திறனை உற்றுநோக்கினால் எந்தவொரு சாதாரண மனிதரும் தங்களுக்கான பாடங்களைப் பெற முடியும். சமூகத்தில் வெற்றியாளராகத் திகழும் வகையில், எந்தத் துறையிலும் கோலோச்ச முடியும்.

(தினமணி)

# வடஅயர்லாந்து பெல்வாஸ்ட் கலவரம்: தொடரும் மத, இன, நிற குரோத முரண்பாடு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வடக்கு அயர்லாந்தின் தலைநகரமான பெல்வாஸ்டில் பல தசாப்தங்களாக அரசியல், இனமற்றும் மத அடையாளங்களைச் சுற்றியுள்ள முரண்பாடுகளின் வரலாற்றைக் கொண்டநகரமாகும். கடந்த காலத்தில் கத்தோலிக்கர் மற்றும் புராட்டஸ்டண்ட் சமூகங்களுக்கிடையேயான மோதல்களால் உலகின் கவனத்தை ஈர்த்தது.

தற்போது இந்தநகரம், 2026 ஆம் ஆண்டில் வேறொரு சமூகச் சவாலை எதிர்கொண்டுள்ளது. குடியேற்றம், அகதிகள், பொருளாதாரஅழுத்தங்கள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு குறித்தவிவாதங்கள் தீவிரமடைந்த நிலையில், பெல்வாஸ்டின் சில பகுதிகளில் இடம்பெற்ற கலவரங்கள் சமூக ஒற்றுமைகுறித்து புதியகேள்விகளை எழுப்பியுள்ளன.

உலகமயமாக்கல் மற்றும் தொழிலாளர் தேவை காரணமாக, கடந்த இருபது ஆண்டுகளில் வடக்கு அயர்லாந்திற்கு பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் குடியேறினர். கிழக்கு ஐரோப்பா, மத்தியகிழக்கு, ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் பெல்வாஸ்டின் சமூக அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தினர். இந்தமாற்றம் பலரால் பொருளாதார வளர்ச்சிக்கும் கலாச்சார பன்மைத்துவத்திற்கும் ஆதரவாகக் கருதப்பட்டாலும், சிலர் வேலைவாய்ப்பு, வீடமைப்பு மற்றும் பொதுசேவைகளில் அதிகரித்த போட்டியாக இதைப் பார்த்தனர்.

அதேவேளை 2026 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு மக்களிடையே அதிருப்தியை அதிகரித்தன. வேலை வாய்ப்புகள் குறைதல், வீட்டுவசதி பற்றாக்குறை மற்றும் அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கைகள் குறித்த விமர்சனங்கள் சில சமூகங்களில் விரக்தியை உருவாக்கின. இந்த சூழலில், சமூக ஊடகங்களில் பரவிய தவறான தகவல்கள் மற்றும் வதந்திகள் பதற்றத்தை மேலும் தூண்டின. சிலகுழுக்கள் குடியேறிகளை சமூகப் பிரச்சினைகளுக்கான காரணமாக சித்தரிக்க முயன்றன.

பெல்வாஸ்டின் சிலபகுதிகளில் ஆரம்பத்தில் அமைதியான போராட்டங்களாகத் தொடங்கிய நிகழ்வுகள் பின்னர் வன்முறையாகமாறின. குடியேறிகள் வசிக்கும் பகுதிகளில் தாக்குதல்கள், சொத்துச் சேதங்கள் மற்றும் காவல் துறையுடன் மோதல்கள் இடம்பெற்றதாக செய்திகள் வெளியாகின. இதனால் அப்பகுதிகளில் வாழ்ந்த பலகுடியேற்றக் குடும்பங்கள் அச்சமடைந்தன. அவர்கள் தங்களை சமூகத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளாத மனநிலை



வளர்ந்து வருவதாகக் கவலைதெரிவித்தனர்.

### 2026 ஜூன் கலவரம்:

மீண்டும் 2026 ஜூன் மாதத்தில் கடுமையான கலவரங்களால் உலககவனத்தை பெல்வாஸ்ட் ஈர்த்துள்ளது.

ஒரு தனிப்பட்ட குற்றச் சம்பவத்தைத் தொடர்ந்து வெடித்த பொதுமக்கள் கோபம், பின்னர் குடியேற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களாகவும் வன்முறைக் கலவரங்களாகவும் மாறியது. இந்தநிகழ்வு, குடியேற்றம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் இணையவழி தவறான தகவல்களின் தாக்கம் குறித்து புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஒரு கத்திக்குத்துத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஒரு சூடானிய அகதிமீது கொலைமுயற்சி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து, சமூக ஊடகங்களில் பல்வேறு தகவல்கள் வேகமாகப் பரவின. இந்தச் சம்பவம் குறித்து வெளியானகாணொளிகள் மற்றும் பதிவுகள் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் அச்சத்தையும் உருவாக்கின. சிலர் இந்தச் சம்பவத்தை தனிப்பட்ட குற்றமாகக் கருதாமல், குடியேற்றக் கொள்கைகளின் தோல்வியாக சித்தரிக்க முயன்றனர்.

இதன் விளைவாக பெல்வாஸ்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. ஆரம்பத்தில் அமைதியானமுறையில் தொடங்கிய சில போராட்டங்கள் பின்னர் வன்முறையாக மாறின. ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்கள், வீடுகள், கடைகள் மற்றும் சமூகமையங்களுக்கு தீவைத்ததாக செய்திகள் வெளியாகின. குறிப்பாக

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மத்தியகிழக்கை மாற்ற நினைத்த ட்ரம்ப், நெதன்யாகு இப்போது எதிர்கொள்ளும் அபாயம் என்ன?

ஈரான் மீதான வெற்றி மத்தியகிழக்கை மறுவடிவமைக்கும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நம்பினர்.

அந்தப் பிராந்தியம் மறுவடிவமைக்கப்பட்டு வருகிறது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த வழியில் இல்லை. ஈரானிய இஸ்லாமியக் குடியரசு தோற்கடிக்கப்படவில்லை. மாறாக, இடையிடையே வெளிப்படையான மோதல்களாக வெடிக்கும் நீண்டகால பதற்றநிலை உருவாகும் அபாயம் அதிகரித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் மற்றும் நெதன்யாகு கருதியதைவிட, ஈரானிய ஆட்சிமுறை உடைப்பதற்கு மிகவும் கடினமான ஒன்று என நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்களின் கணிப்பு தவறிவிட்டது,மேலும் அதன் விளைவுகள் மீதான கட்டுப்பாட்டை அவர்கள் இழந்துவிட்டனர்.

அவற்றில் மிகச் சமீபத்தியது, அமெரிக்காவின் அப்பாச்சி ஹெலிகாப்டரை ஈரான் சுட்டு வீழ்த்தியதாகும். ஈரானின் ஆட்சியாளர்களால் இன்னும் அமெரிக்கர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதையும், இந்தப் போரில் வெற்றி பெறவேண்டும் என்ற உறுதியிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்பதையும் அது காட்டுவதாகக் கருதப்படுகிறது.

ஈரானை பொறுத்தவரை, இந்தப் போரில் பிழைத்து தனது தடுப்பு ஆற்றலை வலுப்படுத்திக் கொள்வதே வெற்றியாகும். குறிப்பாக, உலகின் முக்கியமான கடல் வர்த்தகப் பாதைகளில் ஒன்றான ஹோர்மூஸ் நீரிணை மீது தங்களது செல்வாக்கு அங்கீகரிக்கப்படுவதை ஈரான் முக்கியமாகக் கருதுகிறது.

அமெரிக்க அதிபர் மற்றும் அவரது தளபதிகள் இந்த ஹெலிகாப்டர் இழப்புக்கான தங்களின் பதிலை அளவோடு கொடுக்கவே முயற்சிப்பார்கள். தங்களை யாரும் எளிதாகப் பணியவைக்க முடியாது என்பதை ஆணித்தரமாகக் காட்டுவதற்கும், அதேநேரத்தில் மந்தமாகவும் இதுவரை எந்தப் பலனும் தராமலும் இருக்கும் ராஜ்ஜிய செயல்முறையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அவர்கள் முயல்வார்கள்.

அப்பாச்சி ஹெலிகாப்டரின் குழுவினர் உயிர் பிழைத்தனர். அவர்கள் கொல்லப்பட்டிருந்தால், இன்னும் கடுமையானபதில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கும், ஈரானின் செறிவூட்டப்பட்ட யுரேனியம் இருப்புமற்றும் அதன் பரந்த அணுசக்தித் திட்டங்கள் போன்ற பெரிய பிரச்னைகள் குறித்து நீண்டகால பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கும் ஈரானுடன் ஒரு ஒப்பந்தத்தை எட்டமுடியும் என்ற நம்பிக்கையில் ட்ரம்ப் செயல்பட்டுவந்தார்.

ஆனால், இந்தப் போர் அமெரிக்காவில் பெரும் ஆதரவைப் பெறவில்லை. எனவே, வெற்றியாகக் காட்டக்கூடிய ஒரு தீர்வை அவர் நாடிவருகிறார். ஆனால் அதை அடைவது எதிர்பார்த்ததை விடமிகவும் கடினமான சவாலாகமாறியுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோர் ஒரு பழைய பாடத்தைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள்.

மனிதர்கள் எப்போது போர்க் கலையையும் அதன் சாபத்தையும் கண்டறிந்தார்களோ, அன்றிலிருந்தே ஒரு போரைத் தொடங்குவது எளிது,ஆனால் தெளிவான வெற்றியோடு அதைமுடிப்பதுகடினம் என்பதைத் தலைவர்கள் உணர்ந்துள்ளனர்.

பெப்ரவரி மாதத்தின் கடைசி நாளில் அவர்கள் தங்கள் நாடுகளை ஈரானுக்கு எதிரான போருக்கு வழிநடத்தியபோது, இருவருமே வீடியோ அறிக்கைகளை வெளியிட்டனர். ஒரு வரலாற்று மாற்றத்தின் தருணம் வரப்போகிறது என்ற அனுமானத்தைப் பிரதிபலிக்கும் வார்த்தைகளையே அவர்கள் தேர்ந்தெடுத்தனர். 1979-இல் ஷா தூக்கியெறியப்பட்டதிலிருந்து ஈரானை ஆண்டுவந்த ஆட்சிமுறை முடிவுக்கு வரப்போகிறது என்று கருதப்பட்டது.

புளோரிடாவில் உள்ள தனது மார்-ஏ-லாகோ விடுதியில், அதிகாலை வேளையில் டொனால்ட் ட்ரம்ப், ஜனவரியில் ஈரானிய ஆட்சி எதிர்ப்பாளர்களுக்கு தான் அளித்த “உதவிவந்துகொண்டிருக்கிறது” என்றவாக்கைநினைவுகூர்ந்தார்.

“பெருமை மிக்கஈரானின் சிறந்த மக்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், உங்கள் சுதந்திரத்தின் மணிநேரம் நெருங்கிவிட்டது. பாதுகாப்பாக இருங்கள். உங்கள் வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம். வெளிே யமிகவும் ஆபத்தானது. எல்லா இடங்களிலும் குண்டுகள் விழும். நாங்கள் முடித்ததும், உங்கள் அரசை நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். அது உங்களுடையதாக இருக்கும். இது அநேகமாக தலைமுறைகளுக்கான உங்கள் ஒரே வாய்ப்பாக இருக்கலாம்” என்று கூறியிருந்தார்.

அடுத்தநாள், டெல் அவிவில் உள்ள இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகக் கட்டிடத்தின் மேல் தளத்தில் இருந்து உரையாற்றிய நெதன்யாகுவும், வெற்றி உறுதி செய்யப்பட்டதுபோல் பேசினார்.

“படைகளின் இந்த கூட்டணி,நான் 40 ஆண்டுகளாக எதற்காக ஏங்கினேனோ அதைச் செய்ய நமக்கு அனுமதிக்கிறது. பயங்கரவாத அரசை அடித்து நொறுக்குவது. இதைத்தான் நான் உறுதியளித்தேன். இதையேநாம் செய்வோம்” என்று தெரிவித்தார்.

நெதன்யாகு தனது அரசியல் வாழ்க்கை முழுவதும், இஸ்ரேலுக்கு உண்மையான அச்சுறுத்தல் பாலத்தீனியர்களிடமிருந்தோ அல்லது அவரது நாட்டின் அரபு அண்டை நாடுகளிடமிருந்தோ வரவில்லை, ஈரானிடமிருந்தே வருகிறது என்று வாதிட்டுவந்துள்ளார்.

ஈரானைத் தாக்குவதில் தன்னுடன் இணையுமாறு பிற அமெரிக்க அதிபர்களைப் பெற அவர் முயன்று தோற்றார். டொனால்ட் ட்ரம்ப் வித்தியாசமானவராக இருந்தார்.

2023 அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, அமெரிக்காவின் ஆதரவுடன் செயல்படும் இஸ்ரேலின் ராணுவவலிமை அதன் எதிரிகளைத் தோற்கடித்து, நாட்டுக்கு பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் என்று இஸ்ரேலியர்களிடம் தொடர்ந்து கூறி வந்தார்.

அவரைப் பொறுத்தவரை, பிராந்திய பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதில் ராஜ்ஜியத்தைவிட ராணுவ வலிமையே பதிலாக இருந்தது.

நெதன்யாகு தன் தருணம் வந்துவிட்டது என்ற தோரணையில் இருந்தார்.

ஆனால், பெய்ரூட் மீதுதாக்குதல் நடத்தும் தனது திட்டங்களை கைவிடுமாறு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து ஊடகங்களைச் சந்தித்தபோது, அவர் உற்சாகம் இழந்தவரைப் போல் தோன்றியதாக இஸ்ரேலின் முன்னணி பத்திரிகை கட்டுரையாளரான பென் காஸ்பிட் கூறினார்.




> மார்ச் மாதத்தில் ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டபோது,அது ஜூன் மாதத்திலும் திறக்கப்படாமல் இருந்தால் உலகப் பொருளாதாரத்தில் கடுமையானபாதிப்புகள் ஏற்படும் என்றுபல்வேறுதரப்பினரும் எச்சரித்திருந்தனர்.அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானைத் தாக்கும் வரைதிறந்திருந்த இந்தமுக்கியநீர்வழிப்பாதை இன்னும் மூடப்பட்டே இருக்கிறது. குறிப்பிடத்தக்கராஜ்ஜிய முன்னேற்றங்கள் ஏதும் இல்லாமல், இதுவிரைவில் மீண்டும் திறக்கப்படுவதைக் காண்பதுகடினம்.

நெதன்யாகுவின் கடுமையான விமர்சகர்களில் ஒருவரானபென் காஸ்பிட், அப்போது அவர் “காற்றுவெளியேறிய பலூன் போல” தோன்றியதாக கூறியுள்ளார்.

அதேவேளையில், ராணுவ வலிமையைப் பயன்படுத்தி மத்தியகிழக்குப் பிராந்தியத்தை தனது விருப்பப்படி மாற்றியமைக்க முயன்ற நெதன்யாகுவின் உத்தி தோல்வியடைந்துள்ளது என்பது தற்போது தெளிவாகத் தெரிகிறது.

டொனால்ட் ட்ரம்ப் விரைவான வெற்றியை எதிர்பார்த்தார். அமெரிக்க ராணுவம் வெனிசுவேலா அதிபரையும் அவரது மனைவியையும் சிறைபிடித்து, நியூயார்க்கில் உள்ள ஒரு சிறைக்கு அனுப்பி, கராகஸில் தங்களுக்கு இணக்கமான ஒரு தலைமையை நியமித்ததை அவர் மகிழ்ச்சியோடு பார்த்திருந்தார்.

இது பாடப்புத்தகத்தில் உள்ளதைப் போன்ற ஒரு சிறந்த ஆட்சிமாற்றம் என்றுஅவர் நம்பினார், ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அவரது முன்னோடிகள் நடத்திய முடிவற்ற போர்களை விட இது மிகவும் சிறந்தது என்று கருதினார். அடுத்ததாக ஈரான் அந்தப் பட்டியலில் இருந்தது.

எங்கு தவறு நடந்தது என்று இருவருமே யோசித்துக் கொண்டிருக்கவேண்டும். அமெரிக்கா உலகின் மிக சக்தி வாய்ந்த ராணுவத்தைக் கொண்டுள்ளது. இஸ்ரேல் மத்திய கிழக்கின் வல்லரசு.

டொனால்ட் ட்ரம்ப் மற்றும் நெதன்யாகு ஆகியோர் தடைகள், நிர்வாகத் தவறுகள் மற்றும் ஊழலால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் தள்ளாடிக்கொண்டிருந்த ஈரான் ஆட்சியைப் பார்த்தனர்.

காஸாவில் உள்ள ஹமாஸ் மற்றும் லெபனானில் உள்ள ஹெஸ்பொலா ஆகிய அதன் கூட்டாளிகளுக்கு இஸ்ரேல் பலத்த அடிகளைக் கொடுத்திருந்தது. அதன் மற்றொரு முக் [illegible] சிரியாவின் அதிபர் [illegible] தப்பியோடினார்.



ஜனவரியில், ஆயிரக்கணக்கான ஈரானிய குடிமக்களைக் கொன்றதன் மூலம் தனக்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்டங்களை ஈரான் ஆட்சி நசுக்கியது.

இஸ்லாமிய ஆட்சியின் மீள்தன்மை, இரக்கமற்ற தன்மை மற்றும் தந்திரத்தை அவர்கள் குறைத்து மதிப்பிட்டனர். அதன் உச்ச தலைவரையும் அவரது நெருங்கிய தளபதிகளையும் கொல்வது அந்த ஆட்சி உள்ளிருந்தே வீழ்வதற்கு வழிவகுக்கும் என்றுஅவர்கள் நம்பினர்.

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட, ஒரு தாக்குதலில் இருந்து தப்பிப்பிழைக்கும் வகையில் தன்னைத்தானே வடிவமைத்துக் கொண்ட மற்றும் அதன் மத மற்றும் கருத்தியல் நம்பிக்கைகளால் ஆதரிக்கப்படும் தேசிய பாதுகாப்பு என்ற கருத்தை ஆழமாக வைத்திருந்த ஆட்சிக்கு எதிராக, ராணு வபலத்தின் செயல்திறனை அவர்கள் மிகையாக மதிப்பிட்டனர்.

அமெரிக்காவின் கூட்டாளிகளாக இருக்கும் வளைகுடா நாடுகளும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் போன்ற இஸ்ரேலின் கூட்டாளிகளும் பலத்த அடிகளைச் சந்தித்துள்ளனர்.

இவற்றின் பாதிப்புபெட்ரோலியப் பொருட்கள் மற்றும் உரங்கள் போன்றதுணைப் பொருட்களின் வருவாய் இழப்புடன் மட்டுப்படவில்லை. பலபில்லியன் டாலர் முதலீடுகளையும், சுற்றுலாவையும் ஈர்க்கும் வகையில் நிலையான மற்றும் பாதுகாப்பான பிராந்தியமாக வளைகுடா பகுதியை உருவாக்கும் முயற்சியில் இந்தநாடுகள் ஈடுபட்டிருந்தன. ஆனால், தற்போதைய போர் அந்தக் கனவை சிதைக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாத்தியமான முதலீட்டாளர்களும், சுற்றுலாப் பயணிகளும் போர் அந்தத் தொலைநோக்குப் பார்வையை ஒருகானல் நீராக மாற்றுவதைக் காண்கிறார்கள்.

ஈரானிய ஆட்சிஹோர் மூஸ் நீரிணையை மூடி, தனது வளைகுடா அரபு அண்டை நாடுகளைத் தாக்கியதன் மூலம் உலகப் பொருளாதாரத்தை எவ்வளவு எளிதாகக் முடக்கியது என்பதையும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான நீண்டகால தடுப்புத்திறனாக மாற்றமுடியும் என்று நம்புகிறது.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவால் கொல்லப்பட்ட பழைய தலைமுறையினருக்குப் பதிலாக வந்துள்ள ஈரானியத் தலைவர்கள், தங்களின் முன்னோடிகளைப் போலவே கருத்தியல் ரீதியானவர்கள், ஆனால் ஒரு இருப்புக்கான போராட்டத்தில் ஆபத்துக்களை எதிர்கொள்ள இன்னும் தயாராக இருக்கிறார்கள். அமெரிக்கா அல்லது இஸ்ரேலிடமிருந்து எதிர்காலத்தில் வரும் தாக்குதல்களை வார்த்தைகள் மட்டும் தடுத்து நிறுத்தாது என்று அவர்கள் நம்புகிறார்கள். அதற்குப் பதிலாக,ஈரான் மீதான கூடுதல் தாக்குதல்கள் வலிமிகுந்த விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்பதை அவர்கள் நிரூபிக்க விரும்புகிறார்கள்.

அவர்களின் உத்தியின் ஒரு முக்கியபகுதி லெபனான் போரை வளைகுடா போருடன் இணைப்பதாகும். 1980-களி லிருந்து இஸ்ரேலுக்கு எதிரான தனது முன்னணி பாதுகாப்பு அமைப்பாக வளர்த்துவரும் ஹெஸ்பொலா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால், எந்தவிதமான ஒப்பந்தத்தையும் எதிர்பார்க்க முடியாது என்பதே ட்ரம்புக்கு ஈரான் அனுப்பும் செய்தியாகும்.

லெபனான் மீதுதாக்குதல் நடத்தும் இஸ்ரேலின் திட்டத்தை ட்ரம்ப் தடுக்கமுயன்றதன் மூலம், லெபனானில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும் வளைகுடா பிராந்தியத்தின் நிலைமைக்கும் இடையே தொடர்பு இருப்பதை அவர் மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆனால், இந்த இணைப்பைதாம் ஏற்கப் போவதில்லை என்று நெதன்யாகு திங்கள்கிழமை தெரிவித்துள்ளார். அதை அவர் “சகித்துக்கொள்ள முடியாதது, முற்றிலும் ஏற்கமுடியாதது” என்று வர்ணித்தார்.

ஈரானில் உள்ள இஸ்லாமிய ஆட்சி வீழ்ந்ததாக அறிவிக்கும் வரைபோரைத் தொடரவேண்டும் என்ற நெதன்யாகுவின் நிலைப்பாடு முரணாக போருக்கு முடிவுகாணவேண்டும் என்ற ட்ரம்பின் விருப்பம் உள்ளது என்பது தான் அவரது பிரச்னை.

பெய்ரூட் மீதான திட்டமிடப்பட்ட தாக்குதலை நெதன்யாகு ரத்துசெய்தபோதிலும், அதன் பின்னரும் இஸ்ரேல் ராணுவம் தெற்குலெபனான் பகுதிகளில் தீவிரதாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திவருகிறது.

மார்ச் மாதத்தில் ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டபோது, அது ஜூன் மாதத்திலும் திறக்கப்படாமல் இருந்தால் உலகப் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புகள் ஏற்படும் என்று பல்வேறுதரப்பினரும் எச்சரித்திருந்தனர்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானைத் தாக்கும் வரை திறந்திருந்த இந்த முக்கிய நீர்வழிப்பாதை இன்னும் மூடப்பட்டே இருக்கிறது. குறிப்பிடத்தக்க ராஜ்ஜிய முன்னேற்றங்கள் ஏதும் இல்லாமல், இதுவிரைவில் மீண்டும் திறக்கப்படுவதைக் காண்பதுகடினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடஅயர்லாந்து பெல்வாஸ்ட் கலவரம்:...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடியேற்றக் குடும்பங்கள் வசிக்கும் பகுதிகள் தாக்குதல்களுக்கு உள்ளானதாகக் கூறப்பட்டது. இதனால் பல குடும்பங்கள் தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**வலதுசாரிவன்முறை:**

கடந்த ஜூன் 8 இரவு பெல்வாஸ்ட்டின் கின்னார்ட் அவென்யூ பகுதியில் சூடான் நாட்டைச் சேர்ந்த ஹாதி அலோதித் என்ற அகதி, ஸ்டீபன் ஒகில்வி என்ற மாற்றுத் திறனாளி நபரை சமையலறை கத்தியால் கொடூரமாக தாக்கினார்.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த ஒகில்வி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் தனது இடது கண்ணின் பார்வையை முற்றிலும் இழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதலின் வீடியோகாட்சிகள் சமூகவலைதளங்களில் காட்டுத்தீயாகப் பரவி கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து குடியேறிகளுக்கு எதிராக பெல்வாஸ்ட் நகரிலும் பிரிட்டனின் பிற பகுதிகளிலும் வலதுசாரி அமைப்புகள் போராட்டத்தை அறிவித்தன. இந்த போராட்டம் பல்வேறு இடங்களில் வன்முறையாக மாறியுள்ளது.

பெல்வாஸ்ட் மற்றும் பிரிட்டனின் பல நகரங்களில் வலது சாரிகும்பல் வெளிநாட்டினரின் கடைகள், வாகனங்கள் மற்றும் பொதுப்போக்குவரத்து பேருந்துகள் ஆகியவற்றை தீயிட்டு கொளுத்தி சேதப்படுத்தி வருகின்றன. குறிப்பாக பெல்வாஸ்ட் நகரம் வன்முறைக் காடாகமாறியுள்ளது.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் குடியேறிகளின் வீடுகளுக்குள் புகுந்து ஜன்னல்களை உடைத்து வன்முறையில் ஈடுபட்டனர். சூப்பர் மார்க்கெட், அரசுப் பேருந்து மற்றும் பல கார்கள் தீக்கிரையாக்கப்பட்டன. வன்முறை பெல்வாஸ்ட்டை தாண்டி ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ, எடின்பர்க் மற்றும் லண்டனின் நாடாளுமன்றச் சதுக்கம் வரை பரவியுள்ளது.

ஆனாலும் கலவரத்தை கட்டுப்படுத்த காவல்துறையினர் பெருமளவில் களமிறக்கப்பட்டனர். பல காவல்துறையினரும் காயமடைந்தனர். நிலைமையை சமாளிக்க கூடுதல் பாதுகாப்புப் படைகள், கவச வாகனங்கள் மற்றும் நீர்த்தாரை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. சட்டம்-ஒழுங்கை மீட்டெடுப்பது அதிகாரிகளுக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்தது.

இந்த வன்முறையை வட அயர்லாந்தின் அரசியல் தலைவர்கள் ஒருமித்த குரலில் கண்டித்தனர். பிரிட்டனின் பிரதமரான கியர் ஸ்டாமர் உள்ளிட்ட தலைவர்கள் சட்டத்தின் ஆட்சியையும் சமூக ஒற்றுமையையும் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். தாக்குதலால் பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்தினரும் பழிவாங்கும் நடவடிக்கைகளை நிராகரித்து, அமைதி மற்றும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்தச் சம்பவம் குடியேற்றம் தொடர்பான விவாதங்களை மீண்டும் முன்னிலைப்படுத்தியுள்ளது. வேலை வாய்ப்பு, வீட்டுவசதி மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு சிலர் குடியேறிகளைப் பொறுப்பாக்குகின்றனர். ஆனால் பல ஆய்வுகள் குடியேறிகள் பொருளாதாரவளர்ச்சி, தொழிலாளர் சந்தை மற்றும் சமூகப் பல்வகைமைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதாகக் காட்டுகின்றன. எனவே குடியேற்றம் குறித்த விவாதங்கள் உண்மைகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் நடைபெறவேண்டுமே தவிர, உணர்ச்சிகள் அல்லது தவறான தகவல்களின் அடிப்படையில் நடைபெறக் கூடாது.

வட அயர்லாந்தின் வரலாறு நீண்டகால அரசியல் மற்றும் சமூக மோதல்களால் நிரம்பியுள்ளது. அந்த அனுபவத்தின் அடிப்படையில் பல சமூக அமைப்புகள், மதத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், வெறுப்பைவிட இணக்க வாழ்வும் பரஸ்பர மரியாதையும் மட்டுமே நிலையான தீர்வை வழங்கும் என்று வலியுறுத்துகின்றனர்.

பெல்வாஸ்ட் 2026 கலவரம், ஒரு தனிப்பட்ட குற்றச் சம்பவம் எவ்வாறு சமூக, இன மற்றும் அரசியல் பதற்றங்களுடன் இணைந்து பெரிய அளவிலான வன்முறையாக மாறக்கூடும் என்பதை வெளிப்படுத்திய ஒரு முக்கிய நிகழ்வாகும். இது சட்டஒழுங்கின் முக்கியத்துவத்தையும், பொறுப்பான தகவல் பரவலின் அவசியத்தையும், சமூக ஒற்றுமையைப் பாதுகாக்கும் பொதுபொறுப்பையும் மீண்டும் நினைவூட்டுகிறது. நீடித்த அமைதியும் ஜனநாயக மதிப்புகளும் நிலைத்திருக்க வேண்டுமெனில், அரசாங்கம், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இணைந்து வெறுப்பையும் பிளவுகளையும் எதிர்த்து, அனைவருக்கும் சமமான பாதுகாப்பும் வாய்ப்புகளும் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கவேண்டும். ●

## பாட்டும் நானே பாவமும் நானே...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் அவருக்கு உண்டு. மற்றும்படி கலை என்று பார்த்தால், இசைக் காதால் கேட்டால்,பாடல் வரி என்று பார்த்தால், சங்கீத்சன் தன்னை நிறையச் செதுக்கிக் கொள்ளவேண்டியிருக்கிறது.

அவர் மட்டுமல்ல. வாகீசனுந்தான். வாகீசன் புலம் பெயர்ந்த மிழர்கள் வாழும் நாடெல்லாம் தனது அணியோடு சேர்ந்து கலக்குகிறார். ஆனால் பழையதையே, ஏற்கனவே பிரபல்யம் அடைந்ததையே திரும்பத்திரும்பப் பாடுகிறார். பாடும்போது அவருடைய உடல் மொழியும் ரசிக்கத்தக்கதாக இல்லை. எதிர்ப்பு இசைக் கலைஞர் ஒருவரிடம் இருக்கவேண்டிய மிடுக்கும் ஒர்மமும் அவருடைய உடல் மொழியில் தெரியவில்லை. ஆடை அலங்காரத்திலும் தெரியவில்லை. அவர் வேடனைப் பார்த்துப் பழகவேண்டும்.

இந்த இடத்தில் தமிழ் மக்கள் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்கவேண்டும். தடைசெய்யப்பட்ட ஒன்றைக் கலையாக்கும்போது முதலாவதாக, அதுகலையாக இருக்கவேண்டும். அது கலையாக வெற்றிபெற்றால் தான் அது துணிந்து சொல்லும் அரசியலும் பரவலாகச் செல்லும். வரலாற்றில் நிலைத்து நிற்கும். இல்லையென்றால் ஒரு கட்டத்தில் அது பிரச்சாரமாக சோர்ந்து விழுந்துவிடும். சங்கீத்சன், வாகீசன் போன்ற இளம் பாடகர்கள் இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ் மக்களுடைய போராட்டம் பெருமைப்படத்தக்க கவிதைகளை படைத்திருக்கிறது. நவீன தமிழ்க் கவிதை என்று பார்த்தால் ஈழப் போர் தமிழுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்திருக்கிறது. மிகச் செழிப்பான கவிதைகளை உற்பத்தி செய்த ஈழப்போரின் தொடர்ச்சியாக வந்தராப் பாடகர்கள், தமது முன்னோடிகளிடமிருந்து கவிதைகளை, பாடல்களை எடுக்கலாம். ஏற்கனவே உள்ள நல்ல கவிதைகளுக்கு இசைசேர்க்கலாம். சங்கீத்சன், வாகீசன் உட்பட எல்லாராப் பாடகர்களும் ஈழப்போர் இலக்கியத்தின் அழகியல் வெற்றிகளின் தொடர்ச்சிகளாக மேலெழவேண்டும்.

கைதுசெய்யப்படும் வரையிலும் சங்கீத்சன் அதிகம் வெளித் தெரியவரவில்லை. குறிப்பிட்ட எல்லைக்குள் தான் பிரபல்யம் அடைந்திருந்தார். ஆனால் கைது செய்யப்பட்டதால் அவர் பரவலாகப் பிரபல்யம் அடைந்து விட்டார். அவரைக் கைதுசெய்ததன் மூலம் அரசாங்கம் அவரை முன்னரைவிட அதிகமாக பிரபல்யப்படுத்தி விட்டது.

எந்த அரசியலை அவர் மகிமைப்படுத்துவதாகக் கூறிக் கைதுசெய்யப்பட்டாரோ, அந்த அரசியலை அரசாங்கம் தன்னை அறியாமலேயே பிரபல்யப்படுத்தி,மகிமைப்படுத்தியிருக்கிறது. இது மறைந்த ஈழக்கவிஞர் மு. பொன்னம்பலம் தனது "முன்னிரவின் மோகனம்" என்ற கவிதையில் கூறுவதுபோல "அடக்கு முறைதான் விடுதலையைப் பிரசவிக்கும் மருத்துவிச்சி" அது "அதிகாரம் புரியாத சமன்பாடு" என்பதை நிரூபித்திருக்கிறதா ?

ஆனால் கிடைத்திருக்கும் பிரபல்யத்தை சங்கீத்சன் பாதுகாக்கவேண்டும். வளர்த்தெடுக்கவேண்டும். ஏற்கனவே தமிழில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கவிஞர்களை அணுகி நல்லபாடல் வரிகளைப் பெறலாம். எல்லாச் சொல்விசைக் கலைஞர்களும் நல்ல கவிஞர்களாக இருக்கவேண்டும் என்றில்லை. ஒரு படைப்பு அதன் அரசியலால் பெறக்கூடிய முக்கியத்துவத்துக்கு வரையறை உண்டு. அது ஒரு கலைப் படைப்பாக பெறக்கூடிய முக்கியத்து வந்தான் சாஸ்வதமானது. ●

## தமிழர் வாழ்வியலின்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டமாக இல்லை அது தமிழர் அடையாளம் மற்றும் கலாசார உரிமைக்கான எண்மத் தலைமுறையின் அரசியல் வெளிப்பாடு.

ஒரு காலத்தில் தமிழர் அடையாளம் நிலம் மற்றும் மொழியுடன் நேரடியாக இணைந்திருந்தது. இன்று அந்த அடையாளம் எண்ம உலகின் வழியாக உலகளாவிய பரப்பை அடைகிறது. கனடாவில் வாழும் தமிழ் இளைஞர், ஜெர்மனியில் இருக்கும் தமிழ் மாணவி, இலங்கையில் வாழும் தமிழ் குடும்பம், சென்னை நகரில் வாழும் தொழில்நுட்ப நிபுணர் இவர்கள் அனைவரும் ஒரே எண்ம தமிழ் உலகில் இணைகின்றனர். இதனால், உலகத் தமிழர் கலாசாரம் என்ற புதிய அடையாளம் உருவாகிறது.

இந்த மாற்றம் எதிர்காலத்தில் மேலும் தீவிரமாகும். செயற்கை நுண்ணறிவு, மெய்நிகர் உலகங்கள், எண்மக் கல்வி, மொழிபெயர்ப்பு தொழில்நுட்பங்கள் ஆகியவை தமிழர் வாழ்வியலை புதிய திசைகளில் நகர்த்தும். தமிழ் மொழி கற்றல் இணையத்தின் மூலம் உலகம் முழுவதும் பரவும். பழைய தமிழ் நூல்கள் செயற்கை நுண்ணறிவு மூலம் புதிய தலைமுறையினருக்கு விளக்கப்படும். நாட்டுப்புறக் கலைகள் எண்மக் காப்பகங்களாக பாதுகாக்கப்படும்.

ஆனால், இந்த எதிர்காலம் முழுமையாக நேர்மறையானதல்ல. எண்ம உலகம் கலாசாரத்தை சந்தைப் பொருளாக மாற்றும் ஆபத்தையும் கொண்டுள்ளது.

இன்றைய தலைமுறையினர் பாரம்பரியத்தை அப்படியே பாதுகாக்கவில்லை. ஆனால், அவர்கள் அதை மறுபடியும் உருவாக்குகிறார்கள். இது மிகவும் முக்கியமான மாற்றம். அவர்கள் பாரம்பரியத்தை அருங்காட்சியகத்தில் வைக்க விரும்பவில்லை. அதை வாழும் கலாசாரமாக மாற்ற விரும்புகிறார்கள்.

அதனால்தான், பழைய பாடல்கள் புதிய இசையுடன் கலக்கப்படுகின்றன. பழைய கதைகள் புதிய திரைக்கதைகளாக மாறுகின்றன. பழைய அடையாளங்கள் புதிய அரசியல் மொழிகளில் பேசப்படுகின்றன. இதன்மூலம் ஒரு புதிய வரலாறு உருவாகிறது. அந்த வரலாறு முழுமையாக பழையதல்ல. முழுமையாக புதியதுமல்ல. அது மாற்றப்பட்ட தொடர்ச்சி. தமிழர் வாழ்வியலின் எதிர்காலம் இதில்தான் உள்ளது.

எதிர்காலத்தில் தமிழர் பாரம்பரியம் அதன் பழைய வடிவங்களில் முழுமையாகத் தொடராது. ஆனால், அது அழிந்து போகவும் இல்லை. அது எண்ம வடிவங்களில் புதிய உயிரைப் பெறும். கோயில்கள் மெய்நிகர் தரிசனங்களை வழங்கும். தமிழ்க் கலைகள் செயற்கை நுண்ணறிவுடன் இணையும். பாரம்பரிய இசைகள் உலக இசை வடிவங்களுடன் கலக்கும். தமிழ் மொழி எண்மக் கருவிகளின் வழியாக புதிய தலைமுறைகளை அடையும். ஆனால், இந்த மாற்றத்தின் மையத்தில் ஒரு மிகப் பெரிய கேள்வி தொடர்ந்து இருக்கும் உள்ளடக்கத்தின் உயிரை எவ்வாறு பாதுகாப்பது?

ஒரு நாட்டுப்புறப் பாடலை எண்ம வடிவில் சேமிக்கலாம். ஆனால், அந்தப் பாடலைப் பாடிய மக்களின் வாழ்க்கை உணர்வை எவ்வாறு பாதுகாப்பது? ஒரு திருவிழாவின் விடியோவை பதிவு செய்யலாம். ஆனால், அந்த விழாவின் கூட்டு மனித அனுபவத்தை எவ்வாறு மீட்டெடுப்பது? இதுவே எதிர்கால தமிழர் கலாசாரத்தின் மையச் சிக்கல்.

இன்று தமிழர் வாழ்வியல் ஒரு புதிய எல்லையில் நிற்கிறது. ஒரு பக்கம் ஆயிரம் ஆண்டுகளின் நினைவகம் இன்னொரு பக்கம் முடிவில்லா எண்ம எதிர்காலம். இந்த இரண்டுக்கும் இடையில் புதிய தமிழர் உலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

பாரம்பரியம் உயிருடன் தொடர வேண்டுமெனில், அது மாற வேண்டும். ஆனால், அது மாறும்போது தனது மனிதநேய மையத்தை இழக்கக் கூடாது. தொழில்நுட்பம் ஒரு கருவி மட்டுமே. அந்தக் கருவியை மனிதர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள்? என்பதில்தான் எதிர்கால தமிழர் வரலாற்றின் வடிவம் தீர்மானிக்கப்படும்.

எனவே, பாரம்பரியத்திலிருந்து எண்ம உலகுக்கு தமிழர் வாழ்வியலின் மாற்றப் பயணம் என்பது அழிவின் பயணம் அல்ல. அது மறுவடிவமைப்பின் பயணம். சில நினைவுகள் மறையும் சில வடிவங்கள் மாறும். சில மதிப்புகள் சவாலுக்கு உள்ளாகும் ஆனால், அதே நேரத்தில் புதிய உயிர்ப்புகளும் உருவாகும்.

இந்த மாற்றத்தைப் புரிந்துகொள்ளாமல் பழைய உலகம் சிறந்தது அல்லது புதிய உலகம் சிறந்தது என்று கூறுவது போதாது. உண்மையான சவால் தொழில்நுட்பத்தின் வேகத்துக்குள் மனிதனின் ஆழத்தை எவ்வாறு காப்பாற்றுவது என்பதே. தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் அந்தத் தேடலின் பதிலில் இருக்கிறது. (தினமணி)

## இலங்கையின் புதிய அரசியல்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குக் கவனத்தில் கொள்ள வேண்டிய சர்வதேச பரிமாணங்களும் உள்ளன. ஐரோப்பிய ஒன்றியம், இலங்கைக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டச் சீர்திருத்தம் உள்ளிட்ட ஆட்சிமுறை மற்றும் மனித உரிமைச் சீர்திருத்தங்களுடன் பலமுறை தொடர்புபடுத்தியுள்ளது. பொருளாதார மீட்சி ஒரு தேசிய முன்னுரிமையாக இருக்கும் இந்த நேரத்தில், இப்பிரச்சினைகளில் முன்னேற்றம் காண்பது இலங்கையின் சர்வதேச அந்தஸ்தை வலுப்படுத்தும்.

அரசாங்கத்திற்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. முன்னைய அரசாங்கங்களுக்கு இல்லாத வலுவான தேர்தல் ஆணை, பொதுமக்களின் நல்லெண்ணம் மற்றும் நேர்மையான நற்பெயர் ஆகியவற்றை அது கொண்டுள்ளது. இது நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட வழக்குகளில் நீதியைத் தேடுவதையும், அரசியல் எதிர்ப்பைக் குறைத்து பொதுமக்களின் ஆதரவை விரிவுபடுத்தும் அர்த்தமுள்ள ஜனநாயகச்சீர்திருத்தங்களையும் ஒன்றிணைக்க முடியும்.

இந்த நேரத்தில், ஒரு சிறந்த எதிர்காலத்திற்காக தாமதமின்றி ஒரு நீதியானதும் ஜனநாயக அடிப்படையிலானதுமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையர்கள் அர்ப்பணிக்க வேண்டிய இரு தூண்களாக பொறுப்புக்கூறலும் அதிகாரப் பகிர்வும் விளங்குகின்றன. இப்போது தவறினால் அடுத்த வாய்ப்புக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலைஏற்படுத்தும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கொலையாளிகளுக்கும்...

ஒன்று இருந்தமைக்கான உறுதியான சான்றுகள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டு வருவதாகப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அன்று அதிகாரத்தில் இருந்தவர்கள் மூடிமறைத்த விடயங்கள் இன்று வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இந்த விசாரணைகளைச் சீர்குலைக்க ஒரு தரப்பு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. தங்களின் அரசியல் பிம்பம் சிதைந்துவிடும் என்ற அச்சத்தில், இந்தச் சதியில் ஈடுபட்டவர்கள் ஊடகங்கள், போராட்டங்கள் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்கள் மூலம் விசாரணைகளைப் பின் தள்ள முயற்சிக்கின்றனர். நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையில் கைவைக்கவும், சாட்சியங்களை அச்சுறுத்தவும் இவர்கள் எடுக்கும் முயற்சிகள் அருவருக்கத்தக்கவை.

அரசாங்கம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் எவ்வித அரசியல் தலையீடுகளுக்கும் அஞ்சாமல், உண்மையை வெளிப்படுத்தும் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு வலியுறுத்துகின்றோம். யாராவது குற்றம் செய்யவில்லை என்றால், அவர்கள் விசாரணைகளைக் கண்டு பயப்படத் தேவையில்லை. மாறாக, உண்மையைத் தேடும் இவ்விசாரணைகளுக்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். விசாரணைகளைத் தடுப்பவர்கள், தாங்கள் இக்குற்றத்துடன் தொடர்புடையவர்கள் என்பதையே உறுதிப்படுத்துகிறார்கள்.

இந்த கொடூரக் கொலை குறித்து மேலதிக தகவல்கள் தெரிந்தவர்கள் நீதிக்காகவும், தார்மீக வலிமைக்காகவும் துணிச்சலுடன் முன்வந்து சாட்சியமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். இத்தகைய சவால்களைக் கண்டு அஞ்சாமல், உண்மையை நிலைநாட்ட உறுதியுடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

## குற்றவாளிகள்...

நீதிமன்றக் கட்டமைப்பு ஒன்று உள்ளது. இந்த விசாரணை விடயத்தில் யாருக்கேனும் பிரச்னைகள் அல்லது சந்தேகங்கள் இருந்தால், அவர்கள் நீதிமன்றத்தை நாடித் தங்களது நியாயங்களை முன்வைக்க முடியும். எங்களது கட்சியைப் பொறுத்தவரை நாங்களும் எங்களது தலைமையும் எப்போதும் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கமே நிற்கிறோம்.

இந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னால் இருந்த பிரதான சூத்திரதாரி யார், இதனுடன் தொடர்புடையவர்கள் யார் என்பதை அறிய வேண்டிய தேவை எமக்கு உள்ளது. இதற்கு எவரேனும் மிகச்சிறிய அளவிலாவது உதவி செய்திருந்தால் கூட, அவர்கள் அனைவருக்கும் உரிய தண்டனை கிடைக்கும் வரை நாம் ஓயமாட்டோம். இதுவே எங்களது கட்சியின் முக்கிய கொள்கையாகும்.

யாராவது ஒருவர் கைது செய்யப்பட்டவுடன், அந்தக் கைதில் இருக்கும் குறைபாடுகளைப் பற்றிப் பேசுவது எங்களது பொறுப்பல்ல. அப்படிக் கைது செய்யப்பட்ட நபருக்கு ஏதேனும் அநீதி நடந்திருந்தால், அவர் நீதிமன்றத்தை நாடி தகுந்த சான்றுகளுடன் அதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். தவறுகள் நடக்கும் பட்சத்தில் நாம் நிச்சயமாகப் பேசுவோம்.

ஆனால், தற்போதைய சூழலில் இந்த விசாரணைப் பணிகளுக்கு நாம் தகுந்த அவகாசம் வழங்க வேண்டும். நாம் இந்த விசாரணைகளுக்கு எதிராகவோ அல்லது கைதான ஒருவரைக் குறித்தோ பேச ஆரம்பித்தால், விசாரணைகளைச் சீர்குலைக்கப் பார்க்கிறோம் என்று எம்மீது பழி சுமத்துவார்கள். அது எங்களது நோக்கமல்ல, எமக்குத் தேவை உண்மையான இறுதித் தீர்வு மட்டுமே-என்றார். (அ)

## நீதிமன்ற பணியாளர்...

இது தொடர்பாக வவுனியா விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் நீதிமன்ற உத்தியோகத்தர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இதன்போது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். இதேவேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரும் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மாகாணசபைத் தேர்தல்...

பெண் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கான 25 சதவீத கட்டாய ஒதுக்கீட்டு முறைமை, தேவையான சட்டரீதியான திருத்த நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிர்வாகத் தயார்படுத்தல்களின் நிலைமை உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த புதன்கிழமை பாராளுமன்ற விசேட செயற்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தது.

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான விசேட செயற்குழு அதன்தலைவர் வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தலைமையில் கடந்த வாரம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடியது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் குழுவில் முன்னிலையாகியிருந்தனர்.

மாகாண சபை தேர்தல்கள் தொடர்பான முக்கிய நிர்வாக சட்ட மற்றும் கட்டமைப்புசார்ந்த விடயங்களை ஆணைக்குழு முன்வைத்துள்ளது. இதற்கமைய முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து, இரு வேறுப்பட்ட கொள்கை தெரிவுகளை தேர்தல்கள் ஆணைக்குழு தனது அறிக்கை ஊடாக முன்வைத்துள்ளது.

**முன்மொழிவு 01-**

**வேட்புமனுக்களுக்கான ஒதுக்கீடு மட்டும்**

வேட்புமனுக்களுக்கான ஒதுக்கீடு மட்டும் என்ற முன்மொழிவின் கீழ் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தங்களின் வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது, ஆரம்ப வேட்பாளர் பட்டியலின் போது மாத்திரம் 25 சதவீத பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநித்துவத்துக்கான ஒதுக்கீடு என்ற ஏற்பாடு பொருத்தமானதாக இருக்கும். இந்தத் தெரிவானது வாக்குப்பதிவு முடிந்த பிறகு யாருக்கு எந்த தொகுதிகள் கிடைக்கும் என்பதை மாற்றாது. இது விண்ணப்பக்கட்டத்துக்கு மாத்திரம் பொருத்தமானதாக இருக்கும். சபையின் இறுதி ஆசனங்களில் 25 சதவீதம் பெண்கள் அல்லது இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கு கிடைக்கும் என்பதை இது உத்தரவாதமளிக்காது.

**முன்மொழிவு 02**

**கட்டாய ஆசன ஒதுக்கீடு**

கட்டாய ஆசன ஒதுக்கீட்டின் கீழ் சபையின் இறுதி அமைப்பில் பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கு 25 சதவீத ஆசன ஒதுக்கீடு கட்டாயமாக்கப்படும். தேர்தலுக்குப் பின்னர் ஒரு சிறப்பு ஆசன ஒதுக்கீடு மற்றும் மாற்றீடு செய்யும் முறைமையை பயன்படுத்தும் வகையில் இதனை அடையாளப்படுத்த முடியும். இந்த முறைமையின் கீழ் சபைகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதனை நடைமுறைப்படுத்தும் போது நடைமுறை எண்ணிக்கை மற்றும் சட்ட ரீதியிலான சிக்கல்கள் எழும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துவ முறைமையின் கீழ் பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்கான முறைமை வேட்புமனுக்கள் (இரு விருப்பங்களும் பொதுவானது)

இந்த முறைமையானது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் செயன்முறை ஆரம்பத்தில் மூன்று தனித்தனி வேட்பாளர் பட்டியல்களை உள்ளடக்கிய ஒற்றை வேட்புமனுப் பத்திரத்தை சமர்ப்பித்தைக் கட்டாயமாக்குகிறது.

**வேட்புமனு முறைமையின் செயற்பாட்டு விதம்**

வேட்புமனு முறைமையின் செயற்பாட்டு மாதிரியின் கீழ் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிர்வாக மாவட்டத்துக்கு வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும்போது ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும் மூன்று தனித்துவமான சான்றழிக்கப்பட்ட பிரிவுகளைக் கொண்ட ஒன்றை வேட்புமனுப் பத்திரத்தை தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**முன்னிலை வேட்புமனுப் பட்டியல்**

பாலினம் அல்லது வயது பாரபட்சமின்றி எந்தவொரு வேட்பாளரையும் உள்ளடக்ககூடிய முதன்மைப் பட்டியல் இதுவாகும். இது அந்த மாவட்டத்துக்காகப் பரிந்துரைக்கப்பட வேண்டிய மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கும் சமமானதாகும்.

**பெண்களுக்கான பிரத்தியேக வேட்புமனுப் பட்டியல்**

மாவட்டத்திற்குப் பொருந்தக்கூடிய 25 சதவீத ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்வதற்காகவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டஇ பெண் வேட்பாளர்களின் பெயர்களை மாத்திரம் கொண்ட ஒரு அர்ப்பணிக்கப்பட்ட பட்டியலாகும்.

**இளைஞர்களுக்கான பிரத்தியேக வேட்புமனுப் பட்டியல்**

35 வயதிற்குட்பட்ட இளைஞர் வேட்பாளர்களின் பெயர்களை மாத்திரம் பிரத்தியேகமாகக் கொண்ட ஒரு அர்ப்பணிக்கப்பட்ட பட்டியலாகும்.

ஒன்றையொன்று மேவும் அடையாளங்களுக்கான கட்டாயப் பதிவு உத்தரவு ஒரு இளம் பெண் வேட்பாளர் (35 வயதிற்குட்பட்டவர்) பரிந்துரைக்கப்பட்டால், அவர் இந்த மூன்று பட்டியல்களில் எந்தப் பட்டியலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளார் என்பதை ஆரம்பத்திலேயே கட்சி தெளிவாக அறிவிக்க வேண்டும். அதன் பின்னர் வகைகளுக்கு இடையே மாற்றங்களைச் செய்வதோ அல்லது இடமாற்றம் செய்வதோ முற்றாகத் தடைசெய்யப்படும்.

சதவீதங்களின் விவரக்குறிப்பு: தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியும் மற்றும் சுயேச்சைக் குழுவும் தங்களின் விரிவான வேட்புமனுப் பத்திரங்களுக்குள் குறைந்தபட்சம் 25சதவீத பெண் பிரதிநிதித்துவத்தையும் மற்றும் 25சதவீத இளைஞர் பிரதிநிதித்துவத்தையும் (35 வயதுக்குட்பட்ட வேட்பாளர்கள்) கண்டிப்பாகச் சேர்க்க வேண்டும்.

முழுமையான நிராகரிப்பு வரம்பு: வேட்புமனுப் பத்திரத்தில் அடங்கியுள்ள மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில்இ இந்த கட்டாய சதவீதங்களைச் துல்லியமாகப் பூர்த்தி செய்யத் தவறும் எந்தவொரு வேட்புமனுப் பத்திரத்தையும் முழுமையாக நிராகரிப்பதற்கான முழுமையான சட்டபூர்வ அதிகாரம் சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிக்கு வழங்கப்படும். (அ)

## பல இலட்சம்...

குறிப்பிட்டார்.

அண்மையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த சொல்லிசைப் பாடகர் சங்கீர்த்சன் பின்னர் சாதாரண சட்டத்தின் கீழ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடுதலைக்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறிய சிறீதரன், சங்கீத்சன் கைது செய்யப்பட்ட பின்னர் அவரை சிறையில் சந்தித்ததுடன் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து குறித்த விடயம் தொடர்பாக பேசியிருந்தேன். கடந்த புதன்கிழமை ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பேசியிருந்தேன் அதன்போது சாதாரண பிணையில் அவரை எடுக்க முடியும் என தெரிவித்திருந்தார்.

கடற்றொழில் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் உள்ளிட்டோரிடமும் பேசியிருந்தேன். மக்களின் குரலுக்கு செவிசாய்த்து இந்த அரசாங்கம் விடுதலை செய்துள்ளது. அனைவரின் முயற்சியுமே விடுதலைக்கு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார். மக்களின் கோரிக்கைகளுக்கும் சட்டத்தரணிகளின் முயற்சிகளுக்கும் இணையாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறீதரன் தெரிவித்தார்.

"60,000 மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதும், தமிழர்கள் உள்ளிட்ட பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டதும் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் காரணமாகும். எனவே மாற்றுச் சட்டமின்றி உடனடியாக இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

எந்த இனத்தையோ மதத்தையோ இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வன்முறைச் செயல்களை அனுமதிக்க முடியாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மைகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டுமென வலியுறுத்திய அவர், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார். (அ)

## நிரபராதிகளின் ஆயுட்...

இந்த சட்டத்தினால் நிரபராதிகளின் ஆயுட்காலமும் கூட சிறையிலேயே முடிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கான விசாரணைக் காலம், சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் காலம் மற்றும் நீதிமன்ற விசாரணை முடிவடையும் காலம் ஆகியவற்றிற்கு எந்தவொரு சட்டபூர்வ காலவரையறையும் இல்லை.

பாதுகாப்பு அமைச்சரின் (ஜனாதிபதி) அனுமதியுடன், ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் ஒருமுறை காவல்துறையினரின் அறிக்கையின் அடிப்படையில் ஒருவரை 18 மாதங்கள் வரை தடுத்து வைக்க முடியும். இதனை நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியாது. இந்தச் சட்ட வழக்குகளில் 95 வீதமானவை சித்திரவதைகள் மூலம் பெறப்படும் "சுய ஒப்புதல் வாக்குமூலங்களை" அடிப்படையாகக் கொண்டவை. இதனைத் தடுக்க, கைது செய்யப்பட்ட 10 நாள்களுக்குள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுக்களைத் தாக்கல் செய்து நாம் பல வழக்குகளை விரைவுபடுத்தினோம்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் இளைஞர்கள் மட்டுமன்றி ஊடகவியலாளர்கள், வங்கி முகாமையாளர்கள் எனப் பலரும் இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டனர். தாம் வாதாடிய வழக்குகளில் பலர் 15 முதல் 18 ஆண்டுகள் வரை சிறையிலிருந்துவிட்டு இறுதியில் "நிரபராதிகள்" என விடுதலையாகியுள்ளனர். 22 வருடங்களாக இன்னும் சிறையில் இருக்கும் கைதிகளும் உள்ளனர்.

இறுதியில் அவர்கள் விடுதலையானாலும், ஒரு நிரபராதியின் ஒட்டுமொத்த ஆயுட்காலமும் சிறையிலேயே வீணடிக்கப்பட்டு விடுகிறது-என்றார். (அ)

## 6ஆவது நாளாக...

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலே, கடந்த ஆறு நாள்ட்களாக பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில், சுரேஷ் சாலேயின் மனைவியான மனோரி சாலே, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடம் பல தடவைகள் கடிதம் மூலம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். தடுப்புக் காவலில் உள்ள தனது கணவரைச் சந்திப்பதற்கு சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்குமாறு அவர் அந்தக் கடிதங்கள் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## 2029இல் நாமல்...

உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கௌரவிக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன ஏற்பாடு செய்த நிகழ்வு களுத்துறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலுக்கு நான் விரும்பி வரவில்லை. மக்களால் பலவந்தமான முறையில் அரசியலுக்கு தள்ளப்பட்டேன். கடந்த ஒன்றரை வருடகாலமாக பல சவால்களுடன் அரசியலில் ஈடுபடுகிறேன். எனது தந்தை பயங்கரவாதி என்று ஒருதரப்பினர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் எனது தந்தை பொலிஸில் மூன்றாவது பதவி நிலையில் இருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றியுள்ளார். சிங்கள மக்கள் தமது தலைவராக மகிந்த ராஜபக்ஷவையே பார்க்கிறார்கள். இந்த நாட்டின் ஜனாதிபதியாக நானும் அவரை பார்க்கிறேன்.

பல வாக்குறுதிகளை குறிப்பிட்டுக் கொண்டு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்றுவரை எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இந்த அரசாங்கத்துக்கு நிதியளித்தார்கள். ஆனால் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இனியும் ஏமாற போவதில்லை.

போலியான வாக்குறுதிகளை வழங்கியே ஜனாதிபதி நாட்டு மக்களை ஏமாற்றினார். நாட்டு மக்களுக்கு உண்மையை கூற வேண்டும். முதலில் தனது மனைவி யார் என்பதையும் ஜனாதிபதி குறிப்பிட வேண்டும்.

தனது இனத்தை ஆதரிக்கும் ஒருவர் தான் பிறிதொரு இனத்தையும் ஆதரிப்பார். ஜனாதிபதி உட்பட இந்த அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தனது இனத்தின் மீது பற்றில்லாதவர்கள். இவர்கள் எவ்வாறு பிறிதொரு இனத்தை ஆதரிப்பார்கள்.

நாமல் ராஜபக்ஷ தனது சிங்கள இனத்தின் மீது பற்றுக்கொண்டுள்ளார். ஆகவே அவர் ஏனைய இனங்களையும் ஆதரிப்பார். 2029 ஆம் ஆண்டு நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். அவருடன் பேசி நாங்கள் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்னைக்குத் தீர்வு காண்போம்-என்றார். (அ)

## அரசின் எரிபொருள்...

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அதிகாரிகள்,

எரிபொருள் விலைகளை அதிகரிப்பது தொடர்பில், அரசாங்கம் இதுவரை எந்தவொரு இறுதி முடிவையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

இதேவேளை,

எரிபொருள் நுகர்வைக் குறைப்பதே அரசாங்கத்தின் இலக்கு எனவும், அதற்கமையவே எரிபொருள் விலைகளை அதிகரிப்பது போன்ற தீர்மானங்கள் எட்டப்பட்டதாகவும், ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க, கடந்த மே மாதம் 13 ஆம் திகதி,

நுவரெலியா மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதனால், உள்நாட்டில் ஒரு லீற்றர் டீசலின் விலை 720 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. எனினும், அரசாங்கம் ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாய் மானியம் வழங்கி, அதனை 392 ரூபாய்க்கு மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் காரணமாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் நட்டமடைந்து வருவதுடன், இதனை நீண்ட காலத்திற்கு தொடர முடியாது என, ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான சூழலில், எரிபொருளுக்காக அரசாங்கம் வழங்கி வரும் மானியம், ஜூன் மாதத்துடன் நிறைவடைவதாக பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் அரசாங்க நிதி பற்றிய பாராளுமன்றக் குழு முன்னிலையில் தெரிவித்துள்ளனர். (அ)

## நாட்டை எம்மிடம்...

மத்தியிலேயே தங்கள் அன்றாட வாழ்க்கையைக் கடத்துகின்றனர். தற்போதைய சூழ்நிலையில், மக்களுக்கு மூன்று வேளையும் உணவருந்தக்கூடிய நிலைமை காணப்படுகின்றதா என்ற பலத்த சந்தேகம் எழுந்துள்ளது என குறிப்பிட்டார்.

இதன்போது, பொதுஜன பெரமுன கட்சியின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் எதிர்காலம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி,

"பொதுஜன பெரமுனவிற்கு பலம் உள்ளது. முடிந்தால் நாட்டை மீண்டும் எம்மிடம் ஒப்படைத்துத் பாருங்கள், நாம் அதனை நடத்திக் காண்பிக்கின்றோம் என சவால் விடுத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

## செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்:

# 17ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார!

யாழ்ப்பாணம், ஜூன். 14

யாழ்ப்பாணம்-செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாரபட்சமின்றி நீதி வழங்குவதில் தற்போதைய அரசு மிகவும் அவதானமாகச் செயற்பட்டு வருகின்றது என்றும், இது குறித்து நேரில் ஆராய்வதற்காக எதிர்வரும் 17ஆம் திகதி நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார செம்மணிக்கு விசேட விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான பொருளாதார மீளாய்வு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் நாம் ஆரம்ப காலம் முதற்கொண்டே மிகவும் ஆழமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றோம். கடந்த கால ஆட்சிகளில் இவ்வாறான மனித எச்சங்கள் கண்டெடுக்கப்படும் போது, அவற்றை மூடி மறைக்கும் செயற்பாடுகளே பரவலாக அரங்கேறின. ஆனால், எமது அரசு அவ்வாறு செய்யாது, உண்மை கண்டறியும் பணிகளுக்காகத் தேவையான நிதியொதுக்கீடுகளைச் செய்து வருகின்றது.

நாட்டில் பல்லின சமூகங்களுக்கு இடையில் உண்மையான நல்லிணக்கத்தையும், தமிழ் மக்களிடையே அரசு மீதான நம்பிக்கையையும் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இவ்வாறான வெளிப்படையான நகர்வுகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

இதன் முதற்கட்டமாக, எதிர்வரும் 17ஆம் திகதி நீதி அமைச்சர் செம்மணிப் பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்வதுடன், அது குறித்து ஆழமான கலந்தாலோசனைகளையும் முன்னெடுக்கவுள்ளார்.

அதேபோன்று, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் யாழ்ப்பாணத்துக்கு விசேட விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பகுதியின் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து ஆராயப்படவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தலைவர்களுக்கும் உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# சஹ்ரானை உருவாக்கிய சிந்தனைகள் இன்னும் நாட்டில் வளர்ந்து வருகின்றன!

### ஞானசார தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 14

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருந்த இஸ்லாமிய தீவிரவாதத்தின் உண்மையான வேர்கள் இன்னும் நாட்டுக்குள் செயற்பட்டு வருவகின்றன. சஹ்ரான் ஹாசிமை உருவாக்கிய சிந்தனை மற்றும் கொள்கை அடித்தளங்கள் அழிக்கப்படாமல் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வருவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை, அதனைச் சுற்றியுள்ள அரசியல் விவாதங்கள் மற்றும் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விவகாரம் குறித்து நாம் இன்று பேசத் தொடங்கவில்லை. பல வருடங்களாக தொடர்ந்து எச்சரித்து வருகின்றோம். இந்த விடயங்களைப் பற்றி பேசச் சென்ற காரணத்தினால் பல தடவைகள் அசௌகரியங்களுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றோம். அன்றைய தினங்களில் நாம் மிகுந்த வேதனையுடன் கூறிய விடயங்களையே இன்றும் அதே வேதனையுடன் கூறுகின்றோம்.

ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரின் நியமனம் தொடர்பில் நான் நல்லது என்றும் கூறப் போவதில்லை, கெட்டது என்றும் கூறப் போவதில்லை.

அரசாங்கங்கள் தங்களுடைய அரசியல் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு நியமனங்களை மேற்கொள்வது வழக்கமான விடயமாகும். ஆனால் இன்று நாட்டில் நடைபெறுகின்ற விவாதம் உண்மையை நோக்கியதல்ல.

ஒரு தரப்பு ஒரு பக்கத்திலும் மற்றொரு தரப்பு மறுபக்கத்திலும் நின்று அரசியல் மோதலில் ஈடுபட்டுள்ளன. இதன் மத்தியில் உண்மையான பிரச்னை புதைக்கப்பட்டு வருகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருந்த உண்மையான தீவிரவாத வலையமைப்புகள், அவற்றின் சிந்தனை அடித்தளங்கள் மற்றும் அவற்றை உருவாக்கிய அமைப்புகள் குறித்து எவரும் பேசுவதில்லை. அதற்கு பதிலாக மகா சூத்திரதாரி என்ற ஒரே கதையை மையப்படுத்தி புதிய அரசியல் விவாதங்கள் உருவாக்கப்படுகின்றன.

பிமல் ரத்நாயக்க உள்ளிட்ட சிலர், கர்தினால் ஆண்டகையின் கோரிக்கைக்கு அமைவாகவே இந்த நியமனங்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறுகின்றனர். கடந்த காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக கர்தினால் ஆண்டகை தீவிரமாகச் செயற்பட்டார். அப்போது அவர் நாடு, இனம் மற்றும் கலாசாரம் குறித்து அதிகமாகப் பேசினார்.

அதன் பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. தற்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துடனும் சில உடன்பாடுகள் காணப்படுவதாகத் தோன்றுகின்றது. ஆனால் எமது நிலைப்பாடு மாறவில்லை. உண்மையைச் சொன்னதற்காக திட்டுக்களும் அச்சுறுத்தல்களும் வந்தாலும் அதைத் தொடர்ந்தும் கூறுவோம்-என்றார்.

(அ)

# சிறுவர் தொழிலாளர் ஒழிப்பு என்பது வெறும் சட்ட நடவடிக்கை மட்டுமல்ல, சமூக பொறுப்பு!

### பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க

கொழும்பு, ஜூன். 14

சிறுவர் தொழிலாளர் முறையை ஒழிப்பது என்பது வெறும் சட்ட ரீதியான நடவடிக்கை மட்டுமல்ல, அது ஒரு சமூக மனிதாபிமானப் பொறுப்பு என்றும் தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, மஹரகமையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக அளவில் சுமார் 7.8 வீத சிறு தொழிலில் ஈடுபடும் நிலையில், இலங்கையில் அந்த வீதம் வெறும் ஒரு சதவீதமாக மட்டுமே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் 16 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றம் என்றும், 16 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் ஆபத்தற்ற பணிகளில் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்தவும், அவர்கள் அச்சமின்றியும் சுரண்டலின்றியும் பாதுகாப்பான சூழலில் வளர்வதை உறுதி செய்யவும் அரசாங்கம் பல்வேறு கொள்கை ரீதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

(அ)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த 96 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு!

சென்னை, ஜூன். 14

இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான 96 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் க்யூ பிரிவு ஆய்வாளருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் இந்த வலி நிவாரணி மாத்திரைகள் கைப் பற்றப்பட்டுள்ளன.

அரியமான் கடற்கரை அருகே இருந்த தோப்பு ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெட்டிகளை பொலிஸார் சோதனையிட்டனர்.

அப்போது அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக 8 பெட்டிகளில் சுமார் இந்திய மதிப்பில் ரூ.40 இலட்சம் மதிப்பிலான 96 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

வலி நிவாரணி மாத்திரைகள் அடங்கிய பெட்டிகள் கைப்பற்றிய இந்திய கியூ பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைக்காக இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

(அ)

# கடல் பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 14

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கல்பிட்டி வரையான கடல் பகுதிகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் 'சிவப்பு' எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கல்பிட்டி வரையான கடல் பகுதிகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

இப்பகுதிகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை அதிகரித்து பலத்த வீசக்கூடும்.

மறு அறிவித்தல் வரும் வரை கடற்படையினரும், மீனவ சமூகத்தினரும் இந்த கடல் பகுதிகளுக்குள் செல்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

திருகோணமலை முதல் காங்கேசன்துறை வரை (முல்லைத்தீவு ஊடாக) மற்றும் கல்பிட்டி முதல் பொத்துவில் வரை (கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக) ஆகிய கடல் பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

இப்பகுதிகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

எனவே, இந்த கடல் பகுதிகளில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களும் கடற்படையினரும் மிகுந்த அவதானத்துடன் (விழிப்புடன்) செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மன்னார் முதல் பொத்துவில் வரையான (கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக) கடல் பகுதிகளில் கடல் அலைகளின் உயரமானது சுமார் 2.0 முதல் 2.5 மீற்றர் வரை உயரக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

(அ)

# சங்கீத்சனின் விடுதலை: நாமல் எம்.பி. வரவேற்பு



கொழும்பு, ஜூன். 14

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 24 வயதுடைய சொல் விசைக் கலைஞர் சங்கீத்சன் கணேஸ்குமார் விடுவிக்கப்பட்டமையை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வரவேற்றுள்ளார்.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, இக்கலைஞரின் விடுதலைக்கு பின்னால் உள்ள அரசியல் குறித்துத் தான் எந்தவொரு கருத்தையும் கூற விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

"இந்த முடிவுக்குப் பின்னால் உள்ள அரசியல் குறித்து நான் கருத்து தெரிவிக்கப் போவதில்லை. இங்கு மிக முக்கியமான விடயம் என்னவென்றால், இளம் கலைஞர் சங்கீத்சன் விடுதலை செய்யப்பட்டு, அவரது குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்துள்ளார். அது நடந்ததைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அந்த இளம் கலைஞர் தனது திறமைகளையும் எதிர்கால இலட்சியங்களையும் நேர்மறையான மற்றும் அர்த்தமுள்ள வழியில் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என வாழ்த்துவதாகவும் அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org